# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கால்நடை பராமரிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

## மானியக் கோரிக்கை எண்.6


## திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்

மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

"ஒரு நாட்டின் பெருமை மற்றும் அதன் அற முன்னேற்றத்தை அதன் கால்நடைகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதைக் கொண்டே அளவிட முடியும். ஒரு உயிரினம் எவ்வளவு உதவியற்றதாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக மனிதகுலத்தின் கொடுமையிலிருந்து மனிதனால் பாதுகாக்கப்படுவதற்கு உரிமை இருக்கிறது என்று நான் நம்புகிறேன்."

– **மகாத்மா காந்தியடிகள்**

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | துறையின் குறிக்கோள்கள் | 9 |
| 3 | துறையின் மைல்கற்கள் | 11 |
| 4 | தமிழகத்தின் கால்நடை வளம் | 23 |
| 5 | நிர்வாக அமைப்பு | 27 |
| 6 | கால்நடை மருத்துவ சேவைகள் | 29 |
| 7 | மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப் பொருட்கள் | 35 |
| 8 | கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் | 37 |
| 9 | நோய் கண்காணித்தல், கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல் | 50 |
| 10 | கால்நடை அபிவிருத்தி | 61 |
| 11 | திட்டங்கள் | 67 |
| 12 | கால்நடை மருத்துவத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் | 102 |
| 13 | கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி வரைவுத் திட்டம் | 105 |

| வ. எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 14 | ஜல்லிக்கட்டு – தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம் | 107 |
| 15 | பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள் | 110 |
| 16 | நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் திட்ட நடவடிக்கைகள் | 117 |
| 17 | ஒழுங்குமுறை இணக்கம் மூலம் எளிதான வழிகளில் சேவைகளை மேற்கொள்ளுதல் | 118 |
| 18 | தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை | 122 |
| 19 | முன்னேற்றத்தை நோக்கிய பயணம் | 132 |
| 20 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 142 |
| 21 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–2023 | 200 |
| 22 | முடிவுரை | 201 |

# கால்நடை பராமரிப்புத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2022-23

## 1. முன்னுரை

கால்நடைகள் காலங்காலமாக கிராமப்புற பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக இருந்து வருகின்றன. மக்களின் மத, சமூக மற்றும் கலாச்சார நெறிமுறைகளுடன் பின்னிப்பிணைந்த அவற்றின் முக்கியத்துவம் நாகரீகத்தை கடந்தும் நிலைத்திருக்கிறது. கால்நடை விவசாயம் பயிர் வேளாண்மையை முழுமைப்படுத்தி துணைபுரிவதுடன், பருவமழையின் மாறுபாடுகளால் பயிர் விவசாயம் தோல்வியுற்ற காலத்திலும் விவசாயிகளுக்கு ஆதரவையும் பாதுகாப்பையும் அளித்து வருகிறது.

கால்நடைகள் விவசாய உற்பத்தியின் உலகளாவிய மதிப்பில் 40% ஆகும், இது உலகின் மிக வறுமை நிலையில் உள்ள ஒரு பில்லியன் மக்களை ஆதரிக்கிறது.

வருமான வளர்ச்சி, நகரமயமாக்கலுடன் வீட்டுச் செலவுகள் மற்றும் உணவு நுகர்வு முறையை கணிசமாக மாற்றியுள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுச் செலவு

முறைகள் தானியங்களிலிருந்து விலகி கால்நடைப் பொருட்களை நோக்கி மாறியுள்ளன; உணவுக் கூடையில் கால்நடை பொருட்கள் 25% வரை அடங்கியுள்ளன. குறைந்த வருவாய் பிரிவினரிடையே உணவுக்கான செலவின முறைகள் மாறியுள்ளன. குறைந்த வருவாய் பிரிவினரிடையே உணவுக்கான மொத்த செலவினத்தில் கால்நடை உற்பத்திப் பொருட்களுக்கு செலவிடும் தொகை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகத்துள்ளது.

சமீப காலங்களில் கால்நடை பராமரிப்புத் தொழிலானது துணை நிலையிலிருந்து ஒரு முக்கிய தொழிலாக மாறியுள்ளது. பால் உற்பத்தியின் மதிப்பு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை விட அதிகமாக ஆனதிலிருந்து இதை தெரிந்து கொள்ளலாம்.

2019 ஆம் ஆண்டில் தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) நடத்திய 77வது கணக்கெடுப்பின்படி, 2019-20 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் கால்நடைத் துறை ஒட்டுமொத்த ஆண்டு வளர்ச்சி விகிதம் 8.15% அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இந்தத் தொழிலானது விவசாயக் குடும்பங்கள் அனைத்திலும் அவர்களின் சராசரி மாத

வருமானத்தில் சுமார் 15 சதவீதத்தைக் கொண்டு நிலையான வருவாயை ஈட்டித்தரும் தொழிலாக விளங்கி வருகிறது. கால்நடை வளர்ப்பு மக்கள் இடம்பெயர்வதைக் குறைக்கிறது, ஏனெனில் அது அவர்களுக்கு அர்த்தமுள்ள வேலைவாய்ப்பை வழங்கி நிலையான வருமானத்தை ஏற்படுத்தி மனித வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது. இது கணிசமான எண்ணிக்கையிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது, அவர்களில் பலர் பெண்கள் ஆவர். அவர்கள் கால்நடைகளின் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நாட்கள் செல்லச் செல்ல, அதிகமான இளைஞர்கள் கால்நடை வளர்ப்பை முதன்மைத் தொழிலாக மேற்கொள்கின்றனர், ஏனெனில் இது ஆண்டு முழுவதும் நீடித்த மற்றும் நிலையான வருமானத்தை வழங்குகிறது. பெரும்பாலாக சிறு பண்ணை உற்பத்தி முறையைக் கொண்ட இந்தியாவில், 48% குறு விவசாயிகள், பாதிக்கும் மேலான கால்நடைச் செல்வங்களை வைத்திருப்பது மற்றும் 24% நிலங்களைக் கொண்டிருந்த போதிலும், மூன்றில் இரண்டு பங்கு

ஆடுகளை வைத்திருப்பதும், கால்நடைச் செல்வங்கள் மூலம் அதிக உற்பத்தி மற்றும் இலாபம் ஈட்ட அவர்களால் முடிகிறது.

கால்நடைகள் பால், இறைச்சி மற்றும் முட்டை வடிவில் மிகவும் தேவையான சமச்சீரான சத்தான விலங்கு புரதத்தை வழங்குகின்றன மற்றும் வீட்டின் உணவு பாதுகாப்பை மேம்படுத்துவதோடு தேசிய ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்துவதிலும் பங்களிக்கின்றன. கால்நடைப் பொருட்கள் 17 சதவிகித கிலோ கலோரி நுகர்வுக்கும், உலக அளவில் 33 சதவிகித புரத நுகர்வுக்கும் பங்களிக்கின்றன.

இந்தியா உலகிலேயே மிகப்பெரிய கால்நடை எண்ணிக்கைகளாக கொண்டு ரூ.11596.36 பில்லியன் (2019) மதிப்பிலான கால்நடை பொருட்களை உற்பத்தி செய்கிறது. வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் துறை வாரியான மொத்த மதிப்பு கூட்டல் (GVA)க்கான தேசிய கணக்கு புள்ளிவிவரங்கள் (NAS) 2020 இன் மதிப்பீடுகளின்படி, தேசிய மொத்த வேளாண்மை மற்றும் அதனுடன் இணைந்த துறையான GVA (நிலையான விலையில்) ஆகியவற்றில் கால்நடைகளின் பங்களிப்பு 24.32%-லிருந்து (2014-15) 29.35% (2019-20) ஆக

அதிகரித்துள்ளது. மேலும், 2019-20ல் நாட்டின் மொத்த மதிப்பு கூட்டல் GVAல் கால்நடை வளர்ப்பு மட்டும் 4.35% பங்களித்துள்ளது. இதேபோல், 2020-21ல் ரூ.939.97 பில்லியன் மொத்த மாநில மதிப்பு கூட்டல் (GSVA) உடன், தமிழ்நாட்டில் கால்நடைகளின் பங்களிப்பு 2011-12ல் 3.78 சதவிகிதத்தில் இருந்து 2020-21ல் 5.43 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. அதே சமயம் மாநில வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் பங்களிப்பு 29.86 சதவிகிதத்தில் இருந்து 42.79 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

20வது கால்நடை கணக்கெடுப்பின்படி (2019), உலக அளவில் இந்தியாவின் கால்நடை வளர்ப்புத் தொழில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, உலக கால்நடை எண்ணிக்கையில் இந்தியாவின் பங்களிப்பு 11.6% ஆகும். இந்தியாவில் உள்ள 536.76 மில்லியன் கால்நடைகளின் எண்ணிக்கையில் 193.46 மில்லியன் பசுவினம், 109.85 மில்லியன் எருமைகள், 74.26 மில்லியன் செம்மறி ஆடுகள், 148.88 மில்லியன் வெள்ளாடுகள் மற்றும் 9.06 மில்லியன் பன்றிகள், 851.81 மில்லியன் கோழிகள்

ஆகியவை அடங்கி உள்ளன. இந்தியாவின் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை முந்தைய கால்நடை கணக்கெடுப்பை விட 4.6% அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் 9.52 மில்லியன் பசுவினங்கள், 0.52 மில்லியன் எருமைகள், 4.50 மில்லியன் செம்மறி ஆடுகள், 9.89 மில்லியன் வெள்ளாடுகள், 0.07 மில்லியன் பன்றிகள், 1.29 மில்லியன் நாய்கள் மற்றும் 120.78 மில்லியன் கோழிகள் தேசிய கால்நடை வளத்தில் கணிசமான பங்கைப் பகிர்ந்து கொள்கின்றன. அகில இந்திய அளவில் தமிழ்நாடு கோழியின எண்ணிக்கையில் 1வது இடத்திலும், செம்மறியாட்டினத்தில் 4வது இடத்திலும், வெள்ளாட்டினதில் 7 வது இடத்திலும், பசுவினத்தில் 13 வது இடத்திலும் மற்றும் எருமையினத்தில் 14 வது இடத்திலும் உள்ளது. 19 மற்றும் 20ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்புக் காலங்களுக்கு இடையே தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 88.14 லட்சத்தில் இருந்து 95.19 லட்சமாக உயர்ந்துள்ளது. இந்த காலகட்டத்தில் ஆடுகளின் எண்ணிக்கை 81.43 லட்சத்தில் இருந்து 98.89 லட்சமாக அதிகரித்துள்ளது. மாநில அரசின்

ஒருங்கிணைந்த முயற்சிகள் இந்த பாராட்டத்தக்க வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன.

உலக அளவில் பால் உற்பத்தியில் 20.17 சதவிகிதம் அளவு பால் உற்பத்தி செய்து இந்தியா முதலிடத்தில் உள்ளது. 2019-20ல் இந்தியாவின் பால் உற்பத்தி 198.44 மில்லியன் டன்னாக இருந்தது, ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவு 406 கிராம் ஆகும். 2019-20 ஆம் ஆண்டில் 8.76 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து தமிழ்நாடு இந்தியாவில் 11 வது இடத்தைப் பிடித்ததுடன் அதன் பங்களிப்பு 4.41% ஆகும். மாநிலத்தில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவு 316 கிராம் ஆகும். தமிழகத்தில் பால் உற்பத்தி கடந்த ஆண்டைவிட 4.75 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் முட்டை உற்பத்தி 2004-05ல் 45.2 பில்லியனில் இருந்தது, 2019-20 இல் 114.38 பில்லியனாக உயர்ந்துள்ளது. ஒரு ஆண்டில் ஒரு தனிநபருக்குக் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 42-லிருந்து 86 ஆக அதிகத்துள்ளது.. தமிழ்நாடு முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவின்

மொத்த முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு 17.5% பங்கைக் கொண்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில், தமிழ்நாடு 20.02 பில்லியன் முட்டைகளை உற்பத்தி செய்துள்ளது. தனிநபருக்கு ஒரு ஆண்டில் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 265 முட்டைகள் ஆக உள்ளது.

2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த இறைச்சி உற்பத்தி 8.6 மில்லியன் டன்களாக இருந்தது மற்றும் நாட்டின் மொத்த இறைச்சி உற்பத்தியில் கோழி இறைச்சியின் பங்களிப்பு சுமார் 50.5% ஆகும். தமிழ்நாடு, 2019-20 ஆம் ஆண்டில் 0.66 மில்லியன் டன் இறைச்சியை உற்பத்தி செய்து மொத்த இறைச்சி உற்பத்தியில் 7.72% அளவுக்கு பங்களித்து, இந்தியாவில் ஆறாவது இடத்தில் உள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையானது, கால்நடை மருத்துவ நிலையங்களின் பரந்த வலையமைப்பைக் கொண்டு, கால்நடை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் அனைத்துத் துறைகளிலும் ஈடுபடுத்திக் கொண்டு, ஏழைகள் மற்றும் வறுமைநிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை சாதகமாக மாற்றுகிறது.

## 2. துறையின் குறிக்கோள்கள்

- பசுவினங்களுக்கு அயலின மற்றும் கலப்பின உறைவிந்தை பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொண்டு, உள்ளூர் இன பசுக்களின் தரத்தையும், முர்ரா இன உறைவிந்தை பயன்படுத்தி எருமைகளின் தரத்தையும் உயர்த்துவது.

- உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களிலேயே பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது.

- கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தி திறனை பெருக்கி அதன்மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது.

- விஞ்ஞான அடிப்படையில் கால்நடை பராமரிப்பில் கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.

- கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தேவையான நவீன மருத்துவ சேவையை உரிய காலத்தே அளிப்பது.
- தடுப்பூசிகள் போடுதல், நோய் கண்காணிப்பு மற்றும் நோய் கடுங்கண்காணிப்பு வாயிலாக, கால்நடை நோய்களைத் தடுத்து அனைத்துக் கால்நடைகளின் உடல்நலனை உறுதி செய்வது.
- கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது.
- கால்நடைகள் மூலம் மனிதர்களுக்கு பரவும் நோய்களைக் கண்டறிந்து மனிதர்களை நோயிலிருந்து பாதுகாத்தல்.
- நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- விவசாயிகளுக்கு மற்றும் தொழில் முனைவோருக்கும் அடிப்படை மற்றும் நவீன

கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சியை அளிப்பது.

- ❖ இளைஞர்களிடையே தொழில் முனைவோர் திறன்களை உருவாக்குதல் மற்றும் வழங்குதல்

## 3. துறையின் மைல்கற்கள்

| | |
|---|---|
| 1799 | ➢ இந்தியாவில் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் இனப்பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கிந்திய கம்பெனியால் ஐந்து கால்நடை மருத்துவர்கள் இலண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டு, இந்தியாவில் கால்நடை மருத்துவ சேவை தொடங்கப்பட்டது. |
| 1892 | ➢ இராணுவ அதிகாரிகளைக் கொண்டு தனியாக கால்நடை மருத்துவத்துறை தொடங்கப்பட்டது. |
| 1903 | ➢ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. |
| 1924 | ➢ இராணுவத்திடம் இருந்து ஓசூர் கால்நடைப் பண்ணை எடுத்துக் கொள்ளப்பட்டு கால்நடை இனப்பெருக்க நிலையம் நிறுவப்பட்டது. |
| 1948 | ➢ துறைத்தலைவர் பதவி, கால்நடை பராமரிப்பு இயக்குநர் என்று மாற்றப்பட்டது. திரவ விந்தைப் |

| | |
|---|---|
| | பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 1959 | ➢ நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. |
| 1969 | ➢ கால்நடை மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் தனியாகத் தொடங்கப்பட்டது. |
| 1970 | ➢ துறை மறுசீரமைக்கப்பட்டது. |
| 1975 | ➢ உறைவிந்துக் குச்சிகள் வாயிலாக செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப் படுத்தப்பட்டது. |
| 1977 | ➢ கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. |
| 1981 | ➢ ஈரோட்டில், கோழி நோய் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டது. |
| 1999 | ➢ கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம் அமைக்கப்பட்டது. |
| 2003 | ➢ தேசிய பசு மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தொடங்கப்பட்டது. (TNLDA) |

| | |
|---|---|
| 2005-2006 | ➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிதி-X வாயிலாக கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. |
| 2006-2007 | ➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2007-2008 | ➢ தமிழ்நாடு கால்நடை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (TNVIIP) நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் - XI நிதியுதவியுடன் தொடங்கப்பட்டது. |
| 2008-2009 | ➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| 2009-2010 | ➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இவ்வாறாக காப்பீட்டுத் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. |
| 2011-2012 | ➢ மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் |

| | |
|---|---|
| | மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் தொடங்கப்பட்டன.<br><br>➢ தீவன உற்பத்தியை பெருமளவில் அதிகரிக்க மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.<br><br>➢ 585 கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன.<br><br>➢ வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டங்களின் எண்ணிக்கை 65 லிருந்து 76 ஆக அதிகரிக்கப்பட்டது.<br><br>➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி XVII வாயிலாக 360 கால்நடை நிலையங்கள் மற்றும் 12 கால்நடைப் பண்ணைகளில் உள் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது.<br><br>➢ இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் (IVPM) உள்ள நுண்ணுயிரி தடுப்பூசிகள் தயாரிப்பு ஆய்வகம் |

| | |
|---|---|
| | சிறந்த தயாரிப்பு முறைகள் தரத்திற்கு (GMP) மேம்படுத்த ஆணையிடப்பட்டது. |
| 2012-2013 | ➢ கோழியின அபிவிருத்தித் திட்டம் தொடங்கப் பட்டது.<br>➢ மாவட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக, புதிய 5 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன (சென்னை நீங்கலாக).<br>➢ ஒசூரில் அமைந்துள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், கள அளவில் 8 மாவட்டங்களிலும் கருமாற்று தொழில் நுட்பம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ 19வது கால்நடை மற்றும் கோழியின ஐந்தாண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.<br>➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாடு ஆகிய இரு இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டன. |

| | |
|---|---|
| 2013-<br>2014 | ➢ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநரகத்திற்கு தரமான சேவை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்தியதற்காக சுதந்திர தினவிழாவில் "நல் ஆளுமை விருது" வழங்கப்பட்டது.<br>➢ 100 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன.<br>➢ 11 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் தோற்றுவிக்கப் பட்டன.<br>➢ கால்நடை பெரு மருத்துவமனைகள், கால்நடைப் பண்ணைகள் மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டப் பிரிவுகளுக்கு 53 நுண்ணலை நுண்ணாய்வுக் கருவிகள் (Ultrasound Scanners) வழங்கப்பட்டன.<br>➢ எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய நுண்ணலை நுண்ணாய்வு கருவிகள் (Portable Ultrasound Scanners) 5 பன்முக மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன. |

| | |
|---|---|
| | ➢ உள்நாட்டின மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் பர்கூர் ஆகியவற்றைப் பாதுகாக்க கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.<br>➢ "ஒருங்கிணைந்த சிறிய அசைபோடும் விலங்குகள் மற்றும் முயல்கள் மேம்பாட்டுத் திட்ட"த்தின் கீழ் கொட்டில் முறையில் வெள்ளாடுகள் வளர்ப்புத் திட்டம், அபிசேகப்பட்டி, செட்டிநாடு, சாத்தூர், சின்னசேலம் மற்றும் ஓசூர் ஆகிய 5 கால்நடைப் பண்ணைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ பெரிய அளவிலான கோமாரி நோய்க் கிளர்ச்சி, போர்க்கால அடிப்படையிலான தீவிர கட்டுப்பாடு நடவடிக்கைகளின் வாயிலாக முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது.<br>➢ கிராமப்புற புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் (சென்னை நீங்கலாக) விரிவு படுத்தப்பட்டது.<br>➢ சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள நாய் இனப் பெருக்கப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ நபார்டு வங்கியின் XIX வது, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன், 450 கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது.<br>➢ இந்தியாவிலேயே முதன் முறையாக "விலங்கினங்களுக்கான ஆதார செல் ஆராய்ச்சி மையம்" (Stem Cell Research Centre for Animals) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.06.2013 அன்று துவக்கப்பட்டது.<br>➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம். |
| 2014-2015 | ➢ ஸ்ரீரங்கம், இலுப்பூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் புதியதாக 3 கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் வாயிலாக, வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு இணையாக, கால்நடை பராமரிப்பு கோட்டங்களின் எண்ணிக்கை 76 லிருந்து 79 ஆக உயர்த்தப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதியதாக 2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன.<br>➢ 100 கால்நடை கிளைநிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.<br>➢ 50 புதிய கால்நடை கிளைநிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.<br>➢ கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு, போர்க்கால அடிப்படையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>➢ 500 கிராமப்புற இளைஞர்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி மற்றும் உள்ளீடுகள் வழங்கி, 500 தனியார் செயற்கைமுறை கருவூட்டல் மையங்கள் நிறுவ ஆணையிடப்பட்டது.<br>➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் பொருட்டு, தேசிய கால்நடை இயக்கத் திட்டத்தின் கீழ் விரிவுபடுத்த ஆணை இடப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ நபார்டு வங்கியின் XX-வது ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் 226 புதிய கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. |
| 2015-2016 | ➢ நடமாடும் அவசர ஊர்தி திட்டம் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் நிறுவப்பட்டது,.<br>➢ தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையில் உள்ள முதன்மை செயல் அலுவலர் பதவியை கூடுதல் இயக்குநர் பதவிக்கு நிகராக தரம் உயர்த்தப்பட்டது. |
| 2016-2017 | ➢ திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தீவன மற்றும் நீர் பகுப்பாய்வு ஆய்வகம் நிறுவப்பட்டது.<br>➢ காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டன.<br>➢ திருப்பூர் மற்றும் திருவள்ளுர் மாவட்டத்தில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் தோற்றுவிகப்பட்டன. |

| | |
|---|---|
| | ➢ சென்னை, சைதாப்பேட்டையில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. |
| 2017-2018 | ➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிகப்பட்டன.<br>➢ பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டத்தில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் நிறுவப்பட்டன.<br>➢ மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களில் 16 புதிய நிர்வாக பதவி தோற்றுவிகப்பட்டது.<br>➢ சிவகங்கை மாவட்டத்தில் புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டன.<br>➢ ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டன. |
| 2018-2019 | ➢ தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் நிறுவப்பட்டன.<br>➢ திருநெல்வேயில் கால்நடை மற்றும் கோழி தீவன தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது.<br>➢ தர்மபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி இன ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |
| 2019-2020 | ➢ சின்னசேலத்தில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்காவுடன் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ திருவாரூர் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் புதிய கால்நடை நோய் புலனாய்வு பிரிவு கட்டிடம் கட்டப்பட்டது.<br>➢ அரியலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் நிறுவப்பட்டன.<br>➢ திருப்பூர் மாவட்டத்தில் கால்நடை பன்முக மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டது.<br>➢ தஞ்சாவூர் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் அலுவலக புதிய கட்டிடம் கட்டப்பட்டது. |
| 2020-2021 | ➢ தென்காசி மாவட்டத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம் புதியதாக நிறுவப்பட்டது.<br>➢ தர்மபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.<br>➢ தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டது<br>➢ இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தேனி மற்றும் உடுமலைப்பேட்டையில் தோற்றுவிக்கப்பட்டன. |

## 4. தமிழகத்தின் கால்நடை வளம்

"கால்நடைகள் குறைந்த நிலம் ஒருபோதும் வசதியானது அல்ல, கால்நடைகள் நிறைந்த நிலம் ஒருபோதும் ஏழ்மையாக இருக்காது" என்ற அரேபிய பழமொழியை அடிக்கோடிட்டு, தமிழகம் வளமான மற்றும் பல்வகைப்பட்ட கால்நடை வளத்தை கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பு என்பது தமிழ்நாட்டின் வேளாண் சமூகங்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் வருமைகோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் பொருளாதாரத்தில் கால்நடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடைகளின் உற்பத்தி, பிறருக்கு வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் சில நேரங்களில் சிக்கலான, மதிப்புச் சங்கிலிகளில் பங்களிக்கிறது. அவை ஏழைகளுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்க ஒரு முக்கியமான சொத்து மற்றும் பாதுகாப்பு வலையாகும், மேலும் அவை கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்களுக்கு ஊட்டச்சத்துக்கான முக்கிய ஆதாரமாக உள்ளன.

தமிழ்நாட்டில் 245 லட்சம் பல்வேறு முக்கிய கால்நடைகள் தவிர 1207.80 லட்சம் கோழிகள் (2019 கால்நடை கணக்கெடுப்பு) உள்ளன.

**அட்டவணை 1: 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் கால்நடைகள், கோழியினங்களின் எண்ணிக்கை**

| இனம் | கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|
| பசுவினம் | 95.19 |
| எருமையினம் | 5.19 |
| செம்மறியாடுகள் | 45.00 |
| வெள்ளாடுகள் | 98.88 |
| பன்றிகள் | 0.67 |
| மற்றவை (குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேரி கழுதைகள், கழுதைகள் மற்றும் ஒட்டகம்) | 0.07 |
| மொத்த கால்நடைகள் | **245.00** |
| கோழிகள் மற்றும் இதர பறவைகள் (பண்ணை) | 995.16 |

| இனம் | கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|
| கோழிகள் மற்றும் இதர பறவைகள் (புழக்கடை) | 212.64 |
| மொத்த கோழியினம் | 1,207.80 |

தேசிய அளவில் தமிழ்நாடு கோழியின எண்ணிக்கையில், 1-வது இடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையில் 4-வது இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையில் 7-வது இடத்திலும், பசுவின எண்ணிக்கையில் 13-வது இடத்திலும், எருமையின எண்ணிக்கையில் 14-வது இடத்திலும் உள்ளது.

தமிழ்நாட்டில் காங்கேயம் (திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் கரூர் மாவட்டங்கள்), உம்பளச்சேரி (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்கள்) ஆலம்பாடி (தர்மபுரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்கள்) புலிக்குளம் (சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி) பர்கூர் (ஈரோடு மாவட்டம்) மற்றும் தோடா

எருமைகள் (நீலகிரி மாவட்டம்) போன்ற நாட்டு மாடுகள். வளர்க்கப்படுகின்றன. இத்தகைய உள்நாட்டினங்கள் மட்டுமல்லாது கூடுதலான பால் உற்பத்தியைத் தரும் ஜெர்சி கலப்பின மாடுகள் (சமவெளிப் பகுதிகள்), ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பின மாடுகள் (மலைப் பிரதேசங்கள்) விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன.

அதேபோல், உள்நாட்டின செம்மறி ஆடுகளில் மேச்சேரி (சேலம் மற்றும் ஈரோடு மாவட்டம்), இராம்நாடு வெள்ளை (தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்), சென்னை சிவப்பு (சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்), கிலக்கரிசல் (இராமநாதபுரம், விருதுநகர், மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டம்), வேம்பூர் (தூத்துக்குடி மாவட்டம்), திருச்சி கருப்பு (பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்), கோயம்புத்தூர் (கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்) மற்றும் நீலகிரி (நீலகிரி மாவட்டம்) மற்றும் உள்நாட்டின வெள்ளாடுகளில் கன்னி ஆடு (விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி), கொடி ஆடு (தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்), சேலம் கருப்பு (சேலம்,

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) வளர்க்கப்படுகின்றன.

5. நிர்வாக அமைப்பு

காலநடை பராமரிப்புத்துறை, இந்திய ஆட்சிப்பணி அலுவலர் நிலையிலான கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் / இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பப் பணிகளில் ஆணையர் / இயக்குநர் அவர்களுக்கு உதவுவதற்காக ஐந்து கூடுதல் இயக்குநர்கள், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு துணை இயக்குநர் மற்றும் ஒன்பது உதவி இயக்குநர்கள் இயக்குநரகத்தில் பணிபுரிகின்றனர். ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்), ஒரு துணை இயக்குநர் (பணியாளர்) மற்றும் இரண்டு நிர்வாக அலுவலர்கள் துறை நிர்வாகம் சம்பந்தமான பணிகளில் இயக்குநருக்கு உதவுகின்றனர்.

நிதி மற்றும் கணக்கு சம்பந்தமான பணிகளில் உதவுவதற்காக அயற்பணியில் நிதித்துறையிலிருந்து நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், கருவூல கணக்குத் துறையிலிருந்து கணக்கு அலுவலர்,

உதவி கணக்கு அலுவலர், வேளாண்மைத் துறையிலிருந்து வேளாண் உதவி இயக்குநர் மற்றும் கூட்டுறவுத் துறையிலிருந்து துணைப் பதிவாளர் ஆகியோர் ஆணையர் / இயக்குநரகத்தில் துறை சார்ந்த பணிகளில் உதவுகின்றனர்.


மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்களும் மற்றும் துணை இயக்குநர்களும், கோட்ட அளவில் உதவி இயக்குநர்களும் கால்நடை பராமரிப்புத் துறையின் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கின்றனர்.

இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப் பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் (IVPM) கால்நடை தடுப்பூசிகள், கால்நடை உயிரியல் காரணிகளை தயாரிக்கிறது. இந்த நிலையம் கூடுதல் இயக்குநர் பதவி நிலையில் உள்ள ஒரு இயக்குநர் தலைமையில் நிர்வகிக்கப்படுகிறது.

சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் ஒரு இணை இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும்

ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைத்தும் கண்காணித்தும் வருகிறது.

**துறை நிர்வாக அமைப்பு விளக்கப்படம்**




### 6. கால்நடை மருத்துவ சேவைகள்

கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு குறித்த நேரத்தில் தேவையான மருத்துவ சேவையை வழங்கி, மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தி அளவு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது.

1959-60களில் 120 என்ற குறைந்த எண்ணிக்கையில் இருந்த கால்நடை நிலையங்களின் எண்ணிக்கை 2020-21ல் 2,979 என்ற அளவுக்கு விரிவடைந்துள்ளது. இத்துறையில் 16 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 14 கால்நடை பெருமருத்துவ மனைகள், 152 கால்நடை மருத்துவமனைகள், 2,741 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 56 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஆகியவை கள அளவில் இயங்கி வருகின்றன. அவை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை, ஈனியல் சிகிச்சை, சினையுறாத் தன்மை நீக்க சிகிச்சை, நோய் தடுப்பு முறைகள் உள்ளிட்ட பல்வேறு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

- ❖ கால்நடை பன்முக மருத்துவமனைகள் பிரதம மருத்துவரைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக கால்நடை உதவி மருத்துவர்களையும் கொண்டு 24 மணி நேரமும் செயல்பட்டு சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.
- ❖ கால்நடை பெருமருத்துவமனைகள் பிரதம மருத்துவரைத் தலைவராகக் கொண்டு முதுநிலை

கால்நடை மேற்பார்வையாளர்கள் உதவியுடன் சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

❖ கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருத்துவர்களைத் தலைவராகக் கொண்டு, முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்கள் உதவியுடன் விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

❖ கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின்கீழ் செயல்பட்டு, விவசாயி-களுக்கு கால்நடை மருத்துவ சேவைகளையும், அரசு நலத் திட்டங்களையும் மற்றும் விரிவாக்க சேவைகளையும் வழங்கி வருகின்றன.

❖ நடமாடும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

- கால்நடை கிளைநிலையங்கள், கால்நடை ஆய்வாளர்கள் மூலம் முதலுதவிச் சேவைகளையும் சிறு மருத்துவ சேவைகளையும் வழங்கி வருகின்றன.

மேற்கண்ட கால்நடை நிலையங்களில் 2021-22 காலப்பகுதியில் ஆற்றிய பணிகள் பின்வருமாறு:

**அட்டவணை 2: கால்நடை நிலையங்களில் ஆற்றிய பணிகள் 2021-22**

| பணிகள் | | (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிகிச்சை அளித்தவை (முதலுதவி உட்பட) | 377.39 |
| 2 | செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் | 44.62 |
| 3 | தடுப்பூசி பணிகள் | 405.18 |
| 4 | ஆண்மை நீக்க பணிகள் | 8.66 |
| 5 | குடற்புழு நீக்கம் | 385.92 |
| 7 | கன்று பிறப்பு | 22.96 |

## அட்டவணை 3: மாவட்ட வாரியாக கால்நடை நிலையங்களின் விவரம்

| வ. எண். | மாவட்டம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 0 | 0 | 2 | 44 | 9 | 1 |
| 2 | சென்னை | 1 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 1 | 15 | 98 | 26 | 2 |
| 4 | கடலூர் | 0 | 1 | 5 | 92 | 56 | 1 |
| 5 | தர்மபுரி | 0 | 1 | 3 | 80 | 10 | 2 |
| 6 | திண்டுக்கல் | 1 | 0 | 5 | 106 | 63 | 1 |
| 7 | ஈரோடு | 2 | 0 | 6 | 106 | 24 | 3 |
| 8 | காஞ்சிபுரம் | 0 | 1 | 0 | 45 | 14 | 1 |
| 9 | செங்கல்பட்டு | 0 | 1 | 1 | 61 | 24 | 1 |
| 10 | கன்னியாகுமரி | 1 | 0 | 2 | 49 | 15 | 2 |
| 11 | கரூர் | 0 | 1 | 2 | 72 | 12 | 1 |
| 12 | கிருஷ்ணகிரி | 1 | 0 | 2 | 79 | 14 | 1 |
| 13 | மதுரை | 1 | 0 | 4 | 96 | 53 | 1 |
| 14 | நாகப்பட்டினம் | 0 | 0 | 3 | 34 | 14 | 1 |

| வ. எண். | மாவட்டம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | மயிலாடுதுறை | 0 | 2 | 1 | 38 | 7 | 1 |
| 16 | நாமக்கல் | 0 | 0 | 5 | 105 | 8 | 3 |
| 17 | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 37 | 5 | 0 |
| 18 | புதுக்கோட்டை | 0 | 1 | 4 | 101 | 32 | 2 |
| 19 | இராமநாதபுரம் | 0 | 0 | 4 | 55 | 14 | 0 |
| 20 | சேலம் | 1 | 0 | 7 | 149 | 9 | 6 |
| 21 | சிவகங்கை | 0 | 0 | 2 | 79 | 47 | 0 |
| 22 | தஞ்சாவூர் | 1 | 1 | 7 | 105 | 28 | 3 |
| 23 | தேனி | 0 | 0 | 3 | 53 | 46 | 1 |
| 24 | நீலகிரி | 0 | 1 | 2 | 29 | 7 | 3 |
| 25 | திருப்பூர் | 2 | 0 | 7 | 102 | 39 | 1 |
| 26 | திருவள்ளூர் | 0 | 0 | 5 | 88 | 26 | 1 |
| 27 | திருவண்ணாமலை | 0 | 1 | 5 | 124 | 21 | 3 |
| 28 | திருவாரூர் | 0 | 1 | 10 | 72 | 30 | 1 |
| 29 | தூத்துக்குடி | 1 | 0 | 2 | 70 | 41 | 1 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 1 | 0 | 8 | 103 | 34 | 2 |
| 31 | திருநெல்வேலி | 1 | 0 | 5 | 51 | 16 | 1 |

| வ. எண். | மாவட்டம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | தென்காசி | 0 | 0 | 3 | 61 | 19 | 0 |
| 33 | வேலூர் | 1 | 0 | 4 | 38 | 7 | 1 |
| 34 | திருப்பத்தூர் | 0 | 0 | 2 | 37 | 9 | 2 |
| 35 | இராணிப்பேட்டை | 0 | 0 | 2 | 46 | 10 | 1 |
| 36 | விழுப்புரம் | 0 | 0 | 5 | 101 | 6 | 2 |
| 37 | கள்ளக்குறிச்சி | 0 | 1 | 2 | 53 | 18 | 2 |
| 38 | விருதுநகர் | 0 | 0 | 6 | 82 | 27 | 0 |
| மொத்தம் | | 16 | 14 | 152 | 2741 | 840 | 56 |

## 7. மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப் பொருட்கள்

இத்துறைக்கு தேவையான மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப்பொருட்கள், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. நிதி ஒதுக்கீடு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4: நிதி ஒதுக்கீடு விபரம் (2021-2022)**

| வ. எண். | பொருளடக்கம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மருந்துகள் | 2,582.08 |
| 2 | உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள் | 321.17 |
| 3 | தீவிர சுகாதாரத் திட்டம் | 105.00 |
| 4 | தாது உப்புக் கலவை | 496.77 |
| 5 | மாற்று மருந்துகள் | 160.59 |
| 6 | காப்பு நிதி | 209.29 |
| | **மொத்தம்** | **3874.90** |

கிளைநிலையங்கள் உட்பட அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் மருந்துகள் விநியோகம் நிதி உச்சவரம்பு விதிமுறைகளை கவனமாக பின்பற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

## 8. கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை (**Institute of Veterinary Preventive Medicine - IVPM**)

தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின்கீழ் ஒரு அலகாக இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் மாநிலத்தில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களின் பயன்பாட்டுக்காக உயிர்க்காரணிகள் மற்றும் மருந்துகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

**தோற்றம்**

- இந்த நிலையம் முதலில் 1932ஆம் ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் '**ஊநீர் நிலையம்**' என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது.
- 1948ஆம் ஆண்டு இந்நிலையம் இராணிப்பேட்டையில் தற்போது உள்ள 70.961 ஏக்கர் வளாகத்திற்கு மாற்றப்பட்டது.
- 1954ஆம் ஆண்டு முதல் இது கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் என்று அழைக்கப்படுகிறது.

**இந்தியாவில் கால்நடை உயிர்க்காரணிகள் உற்பத்தியில் முன்னோடி**

- கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இந்தியாவில் உள்ள கால்நடை உயிர்க்காரணிகள் உற்பத்தி நிலையங்களிலே ஒரு முன்னோடி நிலையமாக தொடர்ந்து தன்னை நிரூபித்து வருகிறது.

- ஒன்றிய அரசின் மருந்து உரிம ஆணையத்தின் கட்டாயத் தேவையின்படி, தடுப்பூசி தயாரிப்பு வசதியை நல் உற்பத்தி தரத்திற்கு மாற்றியமைக்க இந்நிலையம் முதல் நடவடிக்கை மேற்கொண்டது.

- கோழி நோய் தடுப்பூசி தயாரிப்பு வசதி நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது மற்றும் சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் துள்ளுமாரி போன்ற பாக்டீரியா தடுப்பூசிகளை தயாரிப்பதற்காக நொதிப்பானுடன்கூடிய முழு அளவிலான நல்ல தயாரிப்பு வழிமுறைகள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அடைப்பான் ஸ்போர் தடுப்பூசி தயாரிப்பு நல் உற்பத்தி தர வசதி (GMP) மற்றும் சோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு (GLP) வசதிக்கான பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் இந்த வசதிகள் GMP/GLP தரநிலைகளுடன் கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் விரைவில் தொடங்கப்படும்.

**நோக்கங்கள்**

- முறையான தடுப்பூசிப் பணிகள்மூலம் கால்நடை நோய்களைத் தடுத்து அதன்மூலம் மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்.
- கால்நடைகளின் சுகாதாரப் பாதுகாப்புக்குத் தேவையான தடுப்பூசிகள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதிசெய்து, கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்.
- கோமாரி நோய்த்தடுப்பு மண்டல மையங்கள்மூலம் கோமாரி நோய் கடுங்கண்காணிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் கோமாரி நோய் காரணமாக

விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பைக் குறைத்தல்.

- கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் மூலம் மாநிலத்தில் பல்வேறு நோய் கடுங்கண்காணிப்புப் பணிகளை மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் வாயிலாக மேற்கொள்ளுதல்.

- தடுப்பூசி உற்பத்தி நிலையம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தை, நல்ல தயாரிப்பு வழிமுறைகள் மற்றும் நல் ஆய்வுக் கூட வழிமுறைகள் தரத்திற்கு உயர்த்துதல். அதன்மூலம், தடுப்பூசிகளின் உற்பத்தி மற்றும் சோதனையில் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்தல்.

**நிலையத்தின் பணிகள்**

- இந்த நிலையம் நான்கு நுண்ணியிர் தடுப்பூசிகளையும், ஐந்து நச்சுயிரி தடுப்பூசிகளையும், ஆறு கண்டுபிடிப்பான்களையும், ஒன்பது மருந்துப்

பொருட்களையும் மற்றும் ஒரு கரைப்பானையும் உற்பத்தி செய்து வருகிறது.

- அஸ்காட் தடுப்பூசி, நோய்கிளர்ச்சிகள் மற்றும் பேரிடர் போன்ற காலங்களில், கால்நடை மருத்துவ நிலையங்களின் இலக்கு மற்றும் விவசாயிகளின் தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படுகின்றன

**மருந்துப் பொருட்கள்**

| களிம்புகள் | திரவியங்கள் |
|---|---|
| 1. போரிக் அமிலம் | 1. டர்பன்டைன் |
| 2. மெத்தில் சலிசிலிகேட் | 2. மெத்தில் சலிசிலேட் |
| உடன் அயோடின் | 3. பென்சைல் பென்சோயேட் |
| 3. கந்தகம் | 4.அயோடின் வலிமை |
| 4. துத்தநாக ஆக்சைடு | குறைந்த கரைசல் |
| 5. விட்ஃபீல்டு | |

**கோமாரி நோய் தடுப்பு மண்டல மையம்**

- இந்த மையம் கோமாரி நோய் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு

பகுதியாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியைப் பெறுகிறது. கோமாரி நோய்க் கிளர்ச்சி பரவும் போது, இந்த மையத்தால் ஆய்வு மற்றும் நச்சுயிரி வகைப்படுத்துதல் மேற்கொள்ளப்படும்.

**தற்போதைய பணிகள்**

- விதை மற்றும் வீரியமுள்ள உயிரியல் பொருட்களைப் பராமரித்தல்.
- அஸ்காட் திட்டத்தின்கீழ் பொது மற்றும் குறிப்பிட்ட தேவையை நிறைவுசெய்வதற்காக நுண்ணியிரி தடுப்பூசிகள், நச்சுயிரி தடுப்பூசிகள், கண்டுபிடிப்பான்கள் மற்றும் கரைப்பான்களை வழக்கமாக உற்பத்தி செய்தல்.
- இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு தடுப்பூசிகளை விற்பனை செய்தல்.
- கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள எப்டிவி பிரிவில் தொழில்துறை வகை ஃப்ரீஸ் டிரையர் மூலம் நச்சுயிரி தடுப்பூசிகளை உறைந்து உலர்த்துதல்.

- கினிப் பன்றிகள், எலிகள் மற்றும் முயல்கள் கொண்டு விலங்குகள் மீதான பரிசோதனைகளின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் நோக்கத்திற்கான குழு (CPCSEA) உரிமம் பெற்று சிறிய விலங்குகள் பிரிவைத் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் தடுப்பூசிகளைச் சோதிப்பதற்காகப் பராமரித்தல்.
- தடுப்பூசிகளின் உள் ஆய்வக சோதனை மற்றும் பிற தயாரிப்புகளின் விலங்கு சோதனை மேற்கொள்ளுதல்.
- உயிரியல் தயாரிப்புகளை கட்டுதல் மற்றும் அனுப்புதல்.
- இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோமாரி நோய் மண்டல மையத்தின் A.I.C.R.P மூலம் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் கோமாரி நோய் பற்றிய நோயியல் ஆய்வு மேற்கொள்ளுதல்.
- மாநிலத்தில் எல்லா கோழிகளுக்கும் கோழிக்கழிச்சல் தடுப்பு மருந்து போடுவதற்காக, கரைசல் மற்றும் தடுப்பு மருந்தை விநியோகித்தல்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் அண்டை மாநில பல்கலைக் கழக

கால்நடை மருத்துவ மாணவர்களுக்கு தடுப்பூசி பற்றிய கல்வியை அளித்தல்.

- ஆய்வக தொழில்நுட்பர்களுக்கான பயிற்சி அளித்தல்.

**<u>இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் முடிக்கப்பட்டுள்ள முதன்மையான திட்டங்கள்:</u>**

**1. நுண்ணுயிரி தடுப்பூசி உற்பத்தி ஆய்வகத்தை நல் உற்பத்தி தரத்திற்கு உயர்த்துதல்.**

- நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்
- மொத்த நிதி - ரூ.12.02 கோடி
- புதிய நல் உற்பத்தி தரத்திலான ஆய்வகத்தில் நுண்ணுயிரி தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி தொடங்கியுள்ளன.

**2. உயிர் பாதுகாப்பு சுவர் கட்டுதல்**

- நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்
- மொத்த நிதி - ரூ.2.07 கோடி
- உயிர் பாதுகாப்பு சுவர் கட்டப்பட்டுள்ளது.

**3. இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தருதல்.**

- நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்
- மொத்த நிதி - ரூ.1.02 கோடி
- திட்டம் முடிவுற்றது. நிலையத்திற்கு தண்ணீர் தினமும் வழங்கப்பட்டு வருகிறது.

**4. கோழியின தடுப்பூசி உற்பத்தி ஆய்வகத்தை நல் உற்பத்தி தரத்திற்கு உயர்த்துதல்.**

- நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்
- மொத்த நிதி - ரூ.3.00 கோடி
- புதிய நல் உற்பத்தி தரத்திலான ஆய்வகத்தில் கோழியின தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி தொடங்கியுள்ளன.

**இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:**

**1. அடைப்பான் ஸ்போர் தடுப்பூசி ஆய்வுக் கூடம் நிறுவுதல்**

- 2012-13ல் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இசைவளிக்கப்பட்டது.

- மொத்த செலவினம் – ரூ.57.98 கோடி
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் மூலமாக தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஆகஸ்ட் 2018ல் கட்டுமானப் பணிகள் தொடங்கின, தற்போது மொத்த கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.
- பணிகள் நடைபெற்று வருகிறது.

2. **தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடத்தை நிறுவுதல்**

- நிதியுதவி – நபார்டு
- மொத்த செலவினம் – ரூ.19.925 கோடி
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின்மூலமாக தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஆகஸ்ட் 2018ல் கட்டுமானப் பணிகள் தொடங்கின, தற்போது மொத்த கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.
- முக்கிய உபகரணங்களை வாங்கும் பணி நடைபெற்று வருகிறது.

3. **நல் உற்பத்தித் தர மருந்து ஆய்வுக்கூடத்தை நிறுவுதல்**

- 2018-19 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிவிப்பு
- மொத்த செலவினம் – ரூ.10.00 கோடி
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் GMP தர ஆலோசகரை அடையாளம் கண்டுள்ளது, திட்டத்திற்கான வடிவமைப்பு குழுஉறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அமைப்புக்கு உற்பத்தி திறன்களின் அடிப்படையில் உபகரணங்களை இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.
- அதுமுடிவுற்றதும், ஆனந்திலுள்ள தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தினால், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**இராணிப்பேட்டை கால்நடைநோய் தடுப்பு மருந்து நிலையத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள்:**

1. நல் உற்பத்தி தரத்திற்கு ஏற்ப கன்று வீச்சு நோய் மற்றும் புலனாய்வுப் பிரிவை தரம் உயர்த்துதல்.

   (உத்தேசமான திட்ட செலவினம் – ரூ.28.00 கோடி)

2. நல் உற்பத்தி தரத்திற்கு ஏற்ப ஆட்டம்மை தடுப்பூசி மருந்து உற்பத்தி நிலையத்தை தரம் உயர்த்துதல்.

(உத்தேசமான திட்ட செலவினம் – ரூ.35.00 கோடி )

**அட்டவணை 5: நோய் தடுப்பு மருந்து உற்பத்தி விவரம்**

2021-22

| வ. எண். | உற்பத்தி செய்யப்படும் ஊநீர் | டோஸ்கள் |
|---|---|---|
| அ. | **நுண்ணியிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)** | |
| 1 | அடைப்பான் | 30.00 |
| 2 | சப்பை நோய் | 3.98 |
| 3 | துள்ளுமாரி | 0.59 |
| 4 | தொண்டை அடைப்பான் | 0.59 |
| ஆ. | **நச்சுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)** | |
| 1 | ஆட்டம்மை | 2.24 |
| 2 | வாத்துக் கழிச்சல் | 165.26 |
| 3 | கோழிக்கழிச்சல் - F | - |
| 4 | கோழிக்கழிச்சல் - K | 405.04 |
| 5 | கோழிக்கழிச்சல் - Lasota | - |
| இ. | **நோய் கண்டுபிடிப்பான்கள் (மி.லிட்டரில்)** | |
| 1 | CMT - நோய்க்காரணி | 900 |

| வ. எண். | உற்பத்தி செய்யப்படும் ஊநீர் | டோஸ்கள் |
|---|---|---|
| 2 | கன்று வீச்சு நோய் - நிறமூட்டப்பட்ட நோய்க்காரணி | 990 |
| 3 | கன்று வீச்சு நோய் –பிளெய்ன் நோய்க்காரணி | 1500 |
| 4 | கன்று வீச்சு நோய் –MRT நோய்க்காரணி | 1250 |
| 5 | SPC – நோய்க்காரணி | 0 |
| ஈ. | கரைப்பான் (லிட்டரில்) | |
| 1 | பாஸ்பேட் பஃப்பர் கரைசல் | 4500 |

இந்நிலையத்தில் உள்ள பல்வேறு தடுப்பூசி உற்பத்தி ஆய்வகங்கள் தேசிய பால் அபிவிருத்தி வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 'நல் உற்பத்தி தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

நல் உற்பத்தி தரக்கட்டுப்பாடு /தரஉறுதி ஆய்வுக் கூடம் மற்றும் அடைப்பான் ஸ்போர் தடுப்பூசி உற்பத்தி ஆய்வுக்கூடம் ஆகியவற்றை கட்டும் பணி, நல் உற்பத்தி தரத்தில் சிறு பிராணிகள் சோதனைக்கூடம் (நல்ல ஆய்வக

நடைமுறைகள்) கட்டும் பணி ஆகியவை தற்போது இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 9. நோய் கண்காணித்தல், கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்

பல்வேறு நுண்ணுயிரி, நச்சுயிரி, முதல் உயிரி மற்றும் ஒட்டுண்ணி கிருமிகள், கால்நடைகள் மற்றும் கோழியினங்களைத் தாக்கி விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன. கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி, நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அத்தியாவசியமானது ஆகும்.

இந்த நோக்கத்திற்காக மாநிலத்தில் 31 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளும், 3 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களும், ஒரு நோய் நிகழ்வியல் பிரிவு மற்றும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடமும் செயல்பட்டு வருகின்றன.

## 9.1 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் – (ADIU)

கால்நடைகளின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்து-வதற்கு தடுப்பூசி, கண்காணிப்பு மற்றும் கடுங்கண்காணிப்பு பணிகள் கொள்ளை கால்நடை நோய்களைத் தடுப்பது அவசியம். இப்பிரிவுகள் நோய் முன்னறிவிப்பு, நோய் கிளச்சி தடுப்பு நடவடிக்கை, விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல், தடுப்பூசிகள் விநியோகம் மற்றும் தடுப்பூசி பணிகளை கண்காணித்தல், பல்வேறு நோய்களுக்கான சீரம் மாதிரிகள் சேகரிப்பு, குறிப்பாக கால் மற்றும் வாய் நோய் (FMD), ஆட்டுக்கொல்லி நோய் (PPR), கன்றுவீச்சு நோய் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன

இவை தடுப்பூசிப் பணிகளின் திறனைக் கண்காணிப்பு செய்தல், நோய் எதிர்ப்புத் திறனை மதிப்பீடு செய்தல், ஒட்டுண்ணி நோய் முதல் மனிதர்களுக்கு பரவக்கூடிய கருச்சிதைவு நோய், எலும்புருக்கி நோய், குடல் அழற்சி நோய், பறவைக் காய்ச்சல் நோய் போன்ற ஆபத்தான நோய்கள் வரை ஊநீர் பரிசோதனைக்கு மாதிரிகளை சேகரித்து கண்காணிப்புப் பணிக்கு உதவுதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன.

இப்பிரிவுகளில் நவீன கருவிகளான இரத்தம் மற்றும் சிறுநீர் பகுப்பாய்வுக் கருவி மற்றும் உயிர் வேதியியல் பகுப்பாய்வு கருவிகள் போன்றவை உள்ளன. தடுப்பூசிகள் மற்றும் உயிரியல் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாத்து தடுப்பூசிகளின் குளிர் பதன நிலையினை தக்கவைக்க குளிர்பதன அறைகள் (walk-in-cooler) மற்றும் குளிர்பதனப் பெட்டிகள் உதவுகின்றன.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் 31 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன (சென்னை நீங்கலாக மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களான தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு, மற்றும் மயிலாடுதுறை) இப்பிரிவுகள் தோற்றுவிக்கப்படாத மாவட்டங்களின் தேவையை முறையே திருநெல்வேலி, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கவனித்து வருகின்றன.

## 9.2 கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் (**Poultry Disease Diagnostic Laboratory - PDDL**)

கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ள இடங்களில் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் நாமக்கல் மாவட்டம் ஆண்டகலூர்கேட் மற்றும் ஈரோட்டி  இயங்கி வருகின்றன. நச்சுயிரி நோய்களான கோழிக்கழிச்சல் (RD), பர்சா தொற்றுநோய் (IBD), சுவாச தொற்றுநோய் (IB) மற்றும் பறவையின லூக்கோசிஸ் தொகுப்பு மற்றும் நுண்ணுயிரி நோய்களான சால்மோனெல்லா, இ.கோலி மற்றும் ஒட்டுண்ணி நோய்கள் கோழி எச்சம், இதர மாதிரிகள் பரிசோதித்தல் மற்றும் பிரேதப் பரிசோதனை செய்து கோழியின நோய்களைக் கண்டறிதல் ஆகியவற்றை இவ்வாய்வுக் கூடங்கள் மேற்கொள்கின்றன.

உயிர் பாதுகாப்பு நிலை II (BSL-II) தரத்திலான இந்த ஆய்வுக்கூடங்கள் பறவைக்  காய்ச்சலைக் கண்டறிவதற்கான முதற்கட்ட ஆய்வுகளையும் மேற்கொள்கின்றன.

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தேசிய பால் மேம்பாட்டு வாரியம் (NDDB) மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) இணைந்து நீர் மற்றும் தீவன பரிசோதனை ஆய்வகத்துடன் கூடிய கோழியின நோய்களைக் கண்டறியும் ஆய்வுக்கூடம் அப்பகுதியில் ஏராளமான கறிக்கோழி (பிராய்லர்) விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கட்டப்பட்டுள்ளது.

## 9.3 கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு (Veterinary Epidemiology Centre - VEC)

கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, சென்னை-35, சைதாப்பேட்டையில் செப்டம்பர் 2017ல் தோற்றுவிக்கப்பட்டது. இது தமிழ்நாட்டில் கால்நடைகள் மற்றும் கோழி நோய்களின் கடுங்கண்காணிப்பு, கண்காணிப்பு மற்றும் கால்நடை மற்றும் கோழிநோய்கள் பற்றிய முன்னறிவிப்பை மேற்கொள்வது மாநில அளவிலான உயர்மட்ட அமைப்பாகும்.

இந்தப் பிரிவுக்கு இணை இயக்குநர் நிலையில் உள்ள முதன்மை நோய் நிகழ்வியல் அலுவலர் தலைமை வகிக்கிறார்.

இப்பிரிவு ஆனது, மாவட்ட அளவில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வு கூடங்களின் செயல்பாடுகளை அவ்வப்போது கண்காணித்து, நோய் பரவல் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குகிறது மற்றும் நோயின் தாக்கம் விரைவில் குறைக்கப்படுவதை உறுதி செய்கிறது.

ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தரநிலை நெறிமுறையின்படி (MSP) மண்டல நோய் கண்டறியும் ஆய்வகத்துடன் இணைந்து மூன்று துறைசார்ந்த பண்ணைகளின் (மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர், அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகை) உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பராமரிக்கப்படும் பொலிகாளைகளை பரிசோதிப்பதில் கால்நடை நோய்

நிகழ்வியல் பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. நோயற்ற கால்நடைகளிலிருந்து பெறப்பட்ட செயற்கை கருவூட்டலுக்கான உறைவிந்து குச்சிகள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யப்படுகிறது.

ஒன்றிய அரசால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு பறவைக் காய்ச்சலுக்கு எதிராக கோழிப்பண்ணைகள் / நிறுவனங்களை ஆய்வு செய்வதை ஒருங்கிணைக்கிறது, அவ்வப்போது சர்வதேச கால்நடை சுகாதார அமைப்பினால் (OIE) பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளின்படி பண்ணைகள் இயங்குவது மற்றும் தேவையான அனைத்து உயிர்பாதுகாப்பு மற்றும் உயிர்காப்பு தரநிலைகளையும் பராமரிக்கிறது என்பதையும் உறுதி செய்கிறது.

நடப்பாண்டில் 2021-22 இதுவரை 39 கால்நடை நோய் கிளர்ச்சிகள் தொடர்பான ஆய்வுகளும், கோமாரி நோய் தடுப்பூசிப் பணி, அஸ்காடு தடுப்பூசி கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 9.4மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் (Central Referral Laboratory - CRL)

மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம், மாநிலத்தின் உச்ச நிலை ஆய்வுக்கூடமாகும். இது இராணிப்பேட்டை மாவட்டத்தில் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

சர்வதேச கால்நடை சுகாதார அமைப்பினால் (OIE) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூட உத்திகளின் மூலம் நோய்களை உறுதிப்படுத்துவதிலும், நோய்க் கிளர்ச்சியை அறிவிப்பதிலும், நோய்க் கிளர்ச்சியின் போது நோயைக் கட்டுப்படுத்த தொழில்நுட்ப அறிவுரைகளை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் / கோழியின நோய்க் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றிற்கு வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

## 9.5 நோய் தடுப்பு நடவடிக்கைகள்

தடுப்பூசி பணிகள் அனைத்தும் கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கால்நடை நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும், முந்தைய 5 ஆண்டுகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தின் அடிப்படையில் நோய் முன்னறிவிப்பு செய்யப்பட்டு, நோய்த் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ள காலத்திற்கு முன்பாகவே அனைத்து மாட்டினங்களுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி ஒன்றிய அரசின் திட்டத்தின் (PPR-CP) மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களான அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை நோய்களுக்கான தடுப்பூசிகள் இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்கான நிதி ஆதாரம், கால்நடைகளின் நோய்களை கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு நிதி உதவி வழங்கும் ஒன்றிய அரசு திட்டத்தின் (ASCAD) மூலம் பெறப்பட்டு தடுப்பூசிப் பணிகள் அனைத்தும் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 6: தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரம் 2021-2022**

| நோய் | தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை | தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| அடைப்பான் | மாட்டினம் மற்றும் ஆட்டினம் | 29.430 |
| சப்பை நோய் | மாட்டினம் | 4.500 |
| கால் மற்றும் வாய் கோமாரி | மாட்டினம் | 63.300 |
| தொண்டை அடைப்பான் | மாட்டினம் | 0.810 |
| ஆட்டுக்கொல்லி | வெள்ளாடு | 12.000 |
| வெறிநோய் | செல்லப்பிராணிகள் | 1.250 |
| ஆட்டம்மை | செம்மறியாடு | 0.039 |
| மொத்தம் | | 111.329 |

கோமாரி நோய் என்பது இரட்டைக் குளம்பின கால்நடைகளைத் தாக்கி, கொப்புளங்களை ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்று நோய் ஆகும். இந்நோய் அதிக அளவில்

பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி நோய் தடுப்புத் திட்டம் (FMD-CP) செயல்படுத்தப்பட்டது.

இதுவரை, கோமாரி நோய் தடுப்புத் திட்டம் திட்டத்தின் (FMD-CP)கீழ் மாநிலத்தில் 17 சுற்றுகள் கோமாரி நோய் தடுப்பூசி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, தகுதியுள்ள தோராயமாக 94 லட்சம் பசுவினங்களுக்கு ஒவ்வொரு சுற்றும் ஆறு மாத இடைவெளியில் தடுப்பூசி போடப்பட்டது.

### 9.5.1 தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டம்- கோமாரி நோய் மற்றும் கன்றுவீச்சு நோய் (NADCP)

கோமாரி நோய் மற்றும் கன்றுவீச்சு நோய் திட்டம் (NADCP) ஒன்றிய அரசின் 100% நிதி ஒதுக்கீட்டின் கீழ், மாநிலத்தில் உள்ள தகுதியுள்ள மாடுகளுக்கும் கால் மற்றும் வாய் நோய்க்கு எதிரான தடுப்பூசிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் முதல் சுற்றில் தகுதியான 87.03 லட்சம் மாட்டினங்களுக்கு கோமாரிநோய் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டது.

2021-22 ஆம் ஆண்டில், இரண்டாவது சுற்றில், 29.03.2022 தேதிவரை தகுதியான 63.30 லட்சம் மாட்டினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

NADCP இன் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசினால் வழங்கப்படும் கன்று வீச்சு நோய் தடுப்பூசி பணி தகுதியான பசுக் கன்றுகளுக்கு மேற்கொள்ளப்படும்.

## 10. கால்நடை அபிவிருத்தி

### 10.1 கால்நடை பண்ணைகள்

இத்துறையில் 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகியவை அடங்கும். கால்நடை பராமரிப்பு தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப உத்திகளை கால்நடை வளர்ப்போருக்கு எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் விளக்கும் விதமாக துறைப் பண்ணைகள் மாதிரி

அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. தீவன விதைகள், தீவன புல்கரணைகள் மற்றும் சிறந்த மரபு திறன் கொண்ட கால்நடைகள் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள நியாய விலையில் வழங்கப்படும்.

**அட்டவணை 7: துறை பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பராமரிக்கப்படும் கால்நடை இனங்கள்**

| வ. எண். | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| 1 | அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி |
| | | எருமையினம் | முர்ரா |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிந்தி, காங்கேயம், பர்கூர், புலிக்குளம் |
| | | செம்மறியாடுகள் | மேச்சேரி |
| | | வெள்ளாடுகள் | தலைச்சேரி, கொடியாடு, சேலம் கருப்பு |
| | | பன்றிகள் | பெரிய வெள்ளை யார்க்ஷையர் |
| | | கோழிகள் | அசில் |
| | | குதிரைகள் | கத்தியவார் மற்றும் தரோ இனம் (Thoroughbred) |

| வ. எண். | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், சாஹிவால் |
| | | செம்மறியாடுகள் | கீழக்கரிசல் |
| | | வெள்ளாடுகள் | கன்னிஆடு |
| | | பன்றிகள் | பெரிய வெள்ளை யார்க்ஷையர், லேண்ட்ரேஸ் |
| | | கோழிகள் | வனராஜா, அசில் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| | | செம்மறியாடுகள் | இராமநாதபுரம் வெள்ளை |
| | | வெள்ளாடுகள் | ஜமுனாபாரி |
| | | பன்றிகள் | பெரிய வெள்ளை யார்க்ஷையர், லேண்ட்ரேஸ் |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர் (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி |
| | | எருமையினம் | முர்ரா |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், தார்ப்பார்க்கர், சாஹிவால் |

| வ. எண். | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| | | செம்மறியாடுகள் | இராமநாதபுரம் வெள்ளை |
| | | வெள்ளாடுகள் | ஜமுனாபாரி, தலைச் சேரி |
| | | பன்றிகள் | பெரிய வெள்ளை யார்க்ஷையர் |
| | | கோழிகள் | அசில் |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | பசுவினம் | உம்பளாச்சேரி |
| 9 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (கள்ளக்குறிச்சி மாவட்டம்) | செம்மறியாடுகள் | மேச்சேரி, சென்னை சிவப்பு |
| | | வெள்ளாடுகள் | சேலம் கருப்பு, தலைச்சேரி |
| 10 | ஆட்டுப்பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்) | செம்மறியாடுகள் | சென்னை சிவப்பு |
| 11 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) | செம்மறியாடுகள் | வெம்பூர் |
| | | வெள்ளாடுகள் | கன்னிஆடு |
| 12 | கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (செங்கல்பட்டு மாவட்டம்) | கோழிகள் | வனராஜா, அசில், நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன், ரோட் ஐலாண்ட் சிவப்பு, |
| | | வான்கோழிகள் | பெல்ட்ஸ்வில்லி வெள்ளை |
| | | காடை | ஜப்பானிய காடை |
| 13 | தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்) | | தீவன சோளம் கோஎப்எஸ்-31, கம்பு நேப்பியர்- கோ-4, கோ-5, வேலி மசால், அகத்தி |

10.2 உறைவிந்து உற்பத்தி

மாட்டினங்களில் பால் உற்பத்தியை உயர்த்தும் நோக்கோடு மரபணு தரத்தை உயர்த்துவதற்காகவும், தரமான உறைவிந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை - மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணை, ஆகிய 3 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில், தரமான உறை விந்து உற்பத்தி செய்யும் நோக்குடன், இந்திய அரசு வகுத்துள்ள குறைந்தபட்ச தர நிர்ணய வழிகாட்டுதல்கள் முழுமையாக பின்பற்றப்படுகின்றன. மேலும் ஈச்சங்கோட்டை மற்றும் உதகமண்டலம் உறைவிந்து நிலையங்களுக்கு இந்திய தரநிலைகளின் பணியகம் (Bureau of Indian Standards) I.S.O சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் விவசாயிகள் பராமரிக்கும் கால்நடைகளில் சிறந்த கருவுறுதல், சினைபிடிப்பு சதவீதம் மற்றும் விரைவான மரபுவழி

முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கு ஏற்ற உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்கின்றன.

உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து குச்சிகளை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏதுவாக, 31 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பிரிவுகள் தீவன விதைகள், தீவன நாற்றுகள் மற்றும் தீவன மரக் கன்றுகளை தேவையான விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல் ஆகியவற்றின் வாயிலாக தீவன அபிவிருத்திப் பணியிலும் ஈடுபட்டுள்ளன.

**அட்டவணை 8: உறைவிந்து உற்பத்தி (இலட்சம் டோஸ்களில்)**

| வ. எண் | உறைவிந்து உற்பத்தி நிலையம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| 1 | அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை | 29.33 | 38.42 | 49.13 | 28.79 |

| வ. எண் | உறைவிந்து உற்பத்தி நிலையம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | 11.05 | 16.05 | 14.84 | 10.73 |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகை | 18.43 | 10.34 | 11.74 | 10.30 |
| **மொத்தம்** | | **58.81** | **64.81** | **75.73** | **49.82** |

**11. திட்டங்கள்**

கால்நடை பராமரிப்பு, இலட்சக்கணக்கான சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை மக்களுக்கு வாழ்வாதாரத்தை அளிக்கும் தொழிலாக விளங்குகிறது. இத்துறையானது வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய திட்டங்களை முறையாக செயல்படுத்தி, பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து, கிராமப்புறப் பகுதிகளில் நீடித்த, நிலையான வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஏழை, எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான, பயனாளிகள் சார்ந்த பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

## 11.1 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் 18.01.2000 அன்று தற்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வந்தது. தற்போதைய நிதியாண்டில் இத்திட்டமானது சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் என தரம் உயர்த்தப்பட்டு, நடப்பு நிதியாண்டில் ரூ.7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில், 7760 சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் தொலைதூர அணுக முடியாத கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் கால்நடை சுகாதார வசதிகளை வழங்கவும், விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில், நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி, ஆண்மை நீக்கம் , செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சினை சரிபார்ப்பு,

சுண்டுவாத அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறப்பு மகப்பேறியல் மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளுடன் தாது உப்பு கலவைகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதுவரை, 7760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதனால் 8.06 இலட்சம் விவசாயிகளின் 76.54 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் பயன்பெற்றுள்ளன.

### 11.2 தீவன அபிவிருத்தி

சமச்சீர் ஊட்டச்சத்து என்பது கால்நடைகளின் உற்பத்தி திறன், ஆரோக்கியம் மற்றும் நலனை பாதுகாக்கும் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். சீரான விகிதத்தில் நல்ல தரமான தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் மட்டுமே பால் உற்பத்தி அதிகரிப்பின் நோக்கத்தை பூர்த்தி செய்ய முடியும். பசுந்தீவனத்தின் வழி, ஊட்டச்சத்தினை கால்நடைகளுக்கு வழங்குவது பொருளாதார சிக்கனத்திற்கான ஆதாரமாகும். இது கால்நடைகளின் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கவும்,

இனப்பெருக்க திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தை அதிகளவில் பயன்படுத்துவதால் பால் உற்பத்தி செலவினை குறைத்து அதிக லாபம் கிடைத்திட வழி வகுக்கின்றது.

பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வளமற்ற மேய்ச்சல் நிலங்களில் இருந்து கிடைக்கும் தீவனத்தை விட, பயிரிடப்பட்ட தீவனங்களில் இருந்து பெறப்படும் ஊட்டச்சத்து கால்நடை உற்பத்திக்கு உகந்ததாகும். உணவு மற்றும் பணப்பயிர்களுக்கான தேவை அதிகரித்துள்ளதால் விவசாய நிலத்தில் பசுந்தீவன சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது.

### 11.2.1 பசுந்தீவன உற்பத்தியில் உள்ள இடர்பாடுகள்

அதிக மகசூல் தரும் பசுந்தீவன இரகங்கள் குறைந்த அளவில் கிடைப்பது, மேம்படுத்தப்பட்ட இரகங்களின் தரமான விதைகள் போதிய அளவு இல்லாமை, தரம் குறைந்த உலர் தீவனங்கள், பணப்பயிர்களுக்கென்று சாகுபடி நிலங்களை மாற்றுவது போன்றவை பசுந்தீவனப் பயிர்களின் பரப்பை அதிகரிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களாகும். இது

தவிர விவசாயிகள் பசுந்தீவன உற்பத்தியில் முதலீடு செய்யாமை, பசுந்தீவன அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை இல்லாமை, உபரி பசுந்தீவனங்களை பாதுகாத்து சேமிக்காதது, மேய்ச்சல் நிலங்களின் ஒழுங்கற்ற மேய்ச்சல் மேலாண்மை, போதிய விரிவாக்கம் மற்றும் மனிதவள ஆதரவு இல்லாமையே தீவன பற்றாக்குறை நிலைமையை கணிசமாக அதிகரித்ததற்கான முக்கிய காரணமாகும்.

பசுந்தீவனத்தின் தேவைக்கும் இருப்புக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைக்க, சான்றளிக்கப்பட்ட விதைகள் / மேம்படுத்தப்பட்ட உயர் விளைச்சல் தரக்கூடிய தீவனப் பயிர்களின் தரமான நடவுப் பொருட்களை பயன்படுத்தி பசுந்தீவன விளைச்சலை மேம்படுத்த வேண்டும். ஆண்டு முழுவதும் பசுந்தீவன உற்பத்தியை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு பண்ணையிலும் தேவைக்கு மிகுதியாக உள்ள தீவனத்தை ஊறுகாய் புல்லாகவோ (சைலேஜ்) அல்லது உலர்ந்த நிலையிலோ சேமித்து வைப்பது அவசியம். மேலும், பசுந்தீவனம் அதிகம் கிடைக்கும் காலங்களில் ஆண்டு முழுவதும்

கால்நடைகளுக்கு உணவளிக்கும் பொருட்டு தீவனங்களை பாதுகாத்து சேமிக்கப்பட வேண்டும்.

### 11.2.2 துறையினால் மேற்கொள்ளப்படும் நிலையான தீவன உற்பத்தி முயற்சிகள்:

மாநில தீவன மேம்பாட்டுத் திட்டம் (SFDS) பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய அரசினால் பகிரப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், குறிப்பாக தீவன தட்டுப்பாடு ஏற்படும் காலங்கள் மற்றும் வறட்சி/வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களின் போது, தீவனப் பற்றாக்குறையை சமாளிக்க, தீவன உற்பத்தியை அதிகரிப்பது, கிடைக்கும் தீவனங்களைப் பாதுகாத்தல் மற்றும் தீவன மேலாண்மை செய்தல் ஆகியவற்றில் இத்துறையானது கவனம் செலுத்துகிறது. தேசிய கால்நடை இயக்கம் (NLM), தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் (NADP) கீழ் துரிதப்படுத்தப்பட்ட தீவன உற்பத்தித் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) மற்றும் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) போன்றவை.

- **விழிப்புணர்வு ஏற்படுத்துதல்** - சமச்சீர் ஊட்டச்சத்து நிறைந்த பசுந்தீவனங்களை கால்நடைகளுக்கு வழங்குவது, கால்நடைகளில் ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பசுந்தீவன உற்பத்தி ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு கிராம அளவில் நடத்தப்படும் **"சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்"** மூலம் உருவாக்கப்பட்டு வருகிறது.
- **விவசாயிகள் நிலங்களில் செயல்விளக்க திடல்கள்அமைத்தல்**- விவசாயிகளிடையே சமச்சீரான ஊட்டச்சத்து தீவனங்களை பயிரிடுவதையும், கால்நடைகளுக்கு வழங்குவதையும் விளக்கும் வகையில், தீவனசோளம் CSV 33, ஸ்டைலோ ஸ்கேப்ரா, ஸ்டைலோ ஸ்கோஃபீல்ட் மற்றும் தீவன காராமணி போன்ற தீவன விதை தளைகள் (Kits) அடங்கிய 100 எண்ணிக்கையிலான செயல்விளக்க அலகுகள், சேலம், நீலகிரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

- **வணிக ரீதியான தீவன உற்பத்தி** - விவசாயிகள் / கிராமப்புற இளைஞர்களை வணிக ரீதியாக தீவன உற்பத்தி மற்றும் பாதுகாப்பு நுட்பங்களில் ஊக்குவிக்கும் வகையில், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், விருதுநகர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 150 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களை தீவன மக்காச்சோளம் / சோளம் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டு, சாகுபடி செலவில் விதைகள் உட்பட (அறுவடை செலவு தவிர) 50% மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. தீவனப்பயிர்களை அறுவடை செய்யும் பணி இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 712 மெட்ரிக் டன் பசுந்தீவனங்கள் ரூ.3.50/கிலோ என்ற வீதத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, 11,700 சைலோ பேல்களாக மாற்றி மாவட்ட கால்நடை பண்ணை, ஓசூர், செட்டிநாடு, புதுக்கோட்டை மற்றும் ஆட்டுப்பண்ணை, சாத்தூரில் அவசர கால தேவைக்காக சேமித்து வைக்கப்பட்டுள்ளது.
- **அறிவியல் ரீதியாக மேய்க்கால் நிலம் மேம்பாட்டு** - கிராமப்புற பொருளாதாரத்திற்கு, குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு தவிர்க்க

முடியாதது. இந்த விவசாயிகள் அவர்களது கால்நடைகளின் தீவன தேவைகளுக்கு தங்கள் கிராமத்தில் உள்ள பொது மேய்ச்சல் நிலங்களையே சார்ந்துள்ளனர். எனவே கிராம அளவில் பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்திட விஞ்ஞான ரீதியாக மேய்க்கால் நிலங்களை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதற்கென முன்னோடி திட்டமாக தற்போது மாநிலத்தில் 31 மாவட்டங்களில் 1,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தை மேம்படுத்தும் பணி ரூ.1.67 கோடி ஒதுக்கீட்டுடன் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து இராஜ் துறையில் MGNREGS நிதியினை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முள்புதர் அகற்றும் பணி, நிலத்தை மேம்படுத்துதல், உயிர் வேலி அமைத்தல் மற்றும் நிலத்தை சீரமைத்து பகுதிகளாக பிரித்து அதன் ஓரங்களில் அந்த இடத்திற்கு , பருவநிலைக்கும் ஏற்றவாறு தீவன மரங்கள் அதாவது சூபாபுல், வெல்வேல், கிளைரிசிடியா போன்ற மரங்களை பயிர் செய்தல். தீவன மரக்கன்றுகளுக்கு இடையேயான இடைவெளியில்

அதிக விளைச்சல் தரும் பல்லாண்டு வகை புல், பயறு வகைகள் - செங்கரஸ் மற்றும் ஸ்டைலோ தீவன விதைகளை விதைத்து ஓராண்டு பராமரித்து அந்தந்த ஊராட்சிகளில் ஒப்படைக்கப்படும். ஓராண்டு வரை மேம்படுத்தப்பட்ட மேய்க்கால் நிலங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்காமல் பாதுகாத்து இரண்டாவது வருடம் முதல் கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்காக பயன்படுத்திட அனுமதி வழங்கப்படும். இதனால் கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அதிக மகசூல் தரும் பல்லாண்டு புல் மற்றும் பயறு வகை தீவனங்கள் கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் கிடைக்கும்.

- **மாற்று தீவன உற்பத்தியை ஊக்குவித்தல்** - கால்நடைகளுக்கு மாற்றுத் தீவனங்களைப் பயன்படுத்தும்போது தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, தீவனச் செலவுகளை குறைக்க இயலும். அசோலா ஒரு மாற்றுத் தீவனம் மற்றும் அனைத்து வகையான கால்நடைகளுக்கும் சமச்சீரான ஊட்டச்சத்தினை வழங்கும் தீவனமாகும். மாற்றுத்

தீவனங்களை அளிப்பதன் முக்கியத்துவம் மற்றும் அதன் சாகுபடி முறை குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துவதற்காக விவசாயிகள் வயலில் 30,958 அசோலா உற்பத்தி அலகுகள் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன.

- **மாற்று தீவன உற்பத்தி தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்** - குறைந்த மழைப்பொழிவு மற்றும் சாகுபடி பரப்பு சுருங்கி வருவதால், விவசாயிகள் தீவன உற்பத்திக்கென்று தங்கள் பண்ணை பகுதியை ஒதுக்க இயலவில்லை. எனவே, மண்ணில்லா பசுந்தீவன வளர்ப்பு முறையான நீர்ம தீவன வளர்ப்பு ஹைட்ரோபோனிக்ஸ் (Hydrophonics) மூலம் தீவன உற்பத்தி ஒரு சாத்தியமான மற்றும் செலவு குறைந்த முறை என்பதை விளக்கும் விதமாக விவசாயிகள் வயலில் 3,600 ஹைட்ரோபோனிக்ஸ் அலகுகள் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- **மாதிரி சில்விபாஸ்டோரல் அமைப்பை நிறுவுதல்** - கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், தீவனப் பற்றாக்குறையை போக்கவும், மரத் தீவனங்கள்,

மேய்ச்சல் புற்கள் மற்றும் பயறு வகைகளை கால்நடைகளுக்கு உணவாக அளிப்பதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு உணர்த்தும் வகையில், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சாத்தூர் ஆட்டுப்பண்ணையில் மாதிரி சில்விபாஸ்ச்சர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### 11.2.3 தீவன பதப்படுத்துதல் / சேமிப்பு நடவடிக்கைகள்

- **ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகுகளை நிறுவுதல்** - பருவமழை காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனத்தை விவசாயிகளே ஊறுகாய் புல் (சைலேஜ்) தயாரித்தல் மூலம் பாதுகாத்து, தீவனப் பற்றாக்குறை காலத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் வழங்கப்படுவதை செயல் விளக்கங்களாக விளக்கும் வகையில், 30 மாவட்டங்களில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் - மானாவாரிப் பகுதி மேம்பாட்டின் கீழ் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் 125 சைலேஜ் தயாரிக்கும் அலகுகள்

ரூ.1.17 கோடி செலவில் செயல்விளக்க அலகுகளாக நிறுவப்பட்டு வருகிறது.

- **தீவன விரயத்தைக் குறைப்பதன் மூலம் தீவன பாதுகாப்பை உறுதி செய்தல்**- கால்நடைகளுக்கு கொடுக்கப்படும் தீவனத்தில் 15-20% வரை கால்நடைகளால் உட்கொள்ளாமல் விரயமாகிறது. எனவே, வீண் விரயத்தைக் குறைக்க தீவனங்களை நறுக்கி சிறு துண்டுகளாக்கி வழங்குவது அவசியம். தீவன உற்பத்தியில் உள்ள இடற்பாடுகளை கருத்தில் கொண்டு, கிடைக்கும் தீவனத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 1,000 புல் நறுக்கும் கருவிகள் 75% மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.
- **பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்** - தீவன உற்பத்தி மற்றும் நாள்தோறும் தீவனங்களை கால்நடைளுக்கு வழங்குவது, அதிக உழைப்பு மற்றும் அதிக நேரம் விரயமாவதாக விவசாயிகளால் கருதப்படுகிறது. பெரும்பாலான தீவனப் பயிர்கள் அதிக அளவில் கால்நடைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

எனவே, தீவன உற்பத்தியை மேம்படுத்தவும், ஒரு யூனிட் பரப்பளவில் உற்பத்தியை அதிகரிக்கவும், தீவன அறுவடையில் தகுந்த இயந்திரமயமாக்கல் அவசியமாகிறது. பண்ணை செயல்பாட்டில் உள்ள வேலைப்பளுவை குறைப்பதற்கும், பண்ணை வேலைகளை இலாபகரமானதாக மாற்றுவதற்கும் தீவனப் பயிர்களை அறுவடை செய்வதற்காக 75% மானியத்தில் 2,500 புல் வெட்டும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### 11.2.4 துறைசார் பண்ணைகளில் தீவன மேம்பாடு

துறை சார்ந்த பண்ணைகள் விவசாயிகளுக்கு பசுந்தீவனம், தீவன நடவு பொருட்கள், தீவன மரக்கன்றுகள் மற்றும் மண்புழு உரம் ஆகியவற்றை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் வழங்குவதை உறுதி செய்கிறது. புல் வகை தீவனங்கள் முக்கியமாக கரணைகள்/நாற்றுகள் மூலம் பயிரிடப்படுகின்றன. நமது மாநிலத்தில் பயிரிடப்படும் முக்கிய புல் தீவனம் ஒட்டு இரக கம்பு நேப்பியர் புல் ஆகும். கடந்த பல ஆண்டுகளாகத் துறையின் இடைவிடாத முயற்சியால், தீவன பெருக்கம்

என்ற கருத்து விவசாயிகள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது. இதனால் விவசாயிகளிடையே தரமான தீவன நடவு பொருட்களை உற்பத்தி செய்து, விவசாயிகள் தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொண்டும் வருகின்றனர். மேலும், செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு ஒரு பேலர் யூனிட் ரூ. 9.50 லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு, பருவத்தில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனங்கள் அறுவடை செய்து, பேல்களாக்கப்பட்டு தீவனப் பற்றாக்குறை காலத்தில் தேவைப்படும் பண்ணைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் ஆண்டில், 12 துறை சார்ந்த பண்ணைகளில் 965 ஏக்கர் பரப்பளவில் தீவனப் பயிரிடப்பட்டு, சுமார் 18,500 மெ.டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், 28.19 லட்சம் எண்கள் தீவன புல்கரணைகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையினால் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளின் மூலம், விவசாயிகளின் சொந்த நிலம், மேய்க்கால் நிலங்களில் தீவனப் பயிரிடுதல் மற்றும் வணிகரீதியான தீவன உற்பத்தியை வெற்றிகரமாக

செயல்படுத்தப்பட்டு வருவதால் வரும் காலங்களில் தீவன தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளி கனிசமாக குறைக்கப்படும்.

**11.3 விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்**

2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.75.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஊரக ஏழ்மை நிலையிலுள்ள கணவனை இழந்த / கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற மற்றும் மூன்றாம் பாலின 38,800 பெண்களுக்கு தலா 5 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் 100% மானியத்தில் வழங்கி தொழில்முனைவோராக உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் அவர்களின் நிலையான வாழ்வாதார வழிக்கு உதவுவதன் மூலம் வறுமையின் நிகழ்வுகளைக் குறைக்கும்.

**11.4 கோழியின அபிவிருத்தி**

**11.4.1 குறைந்த இடுபொருள் தேவை கொண்ட கோழி (ம) கறிக்கோழி வளர்ப்புக்காக புதுமையான கோழி உற்பத்தி திட்டம்**

குறைந்த இடுபொருள் மற்றும் பராமரிப்பு தேவை கொண்ட (கிரிராஜா, வனராஜா மற்றும் கிராமபிரியா) போன்ற

கோழி வகைகள் வளர்ப்பினை துறை ஊக்குவிக்கிறது. 'தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில்' மத்திய அரசின் 60 விழுக்காடு மற்றும் மாநில அரசின் 40 விழுக்காடு நிதியுதவியுடன் தருமபுரி (ம) இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.140 இலட்சம் நிதியுதவியுடன் 2018-19 (ம) 2019 -20 ஆம் நிதியாண்டிலும், புதுக்கோட்டை (ம) விருதுநகர் மாவட்டங்களில் ரூ.100 இலட்சம் நிதியுதவியுடன் 2020-21ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி (ஒரு மாவட்டத்திற்கு 200 பயனாளிகள் வீதம்) பயனாளி ஒருவருக்கு இருவகைதிறன் (இறைச்சி மற்றும் முட்டை) கொண்ட 4 வார வயதுடைய 200 கோழிகள் மற்றும் இரவு கூண்டுகள் கொள்முதல் செய்ய நிதி வழங்கப்பட்டுள்ளது. முட்டை உற்பத்தி காலமான 72 வார இடைவெளியில் இரண்டாவது தொகுப்பாக பயனாளிக்கு 200 கோழிகள் கொள்முதல் செய்ய நிதி வழங்கப்படுவதன் மூலம் கோழிப் பண்ணைகளின் நிலையான தன்மையை உறுதி செய்வதோடு விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இதை தவிர 2018-19ம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில் கறிக்கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் 200 பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு ஒரு நாள் வயதுடைய 600 கோழி குஞ்சுகள், (150 கோழி குஞ்சுகளாக நான்கு முறை) கொள்முதல் செய்ய நிதி வழங்கப்பட்டுள்ளது. கறிக் கோழிகளுக்குத் தேவையான கொட்டகை கட்டுமான நிதியுடன், தீவனம் மற்றும் தண்ணீர் வைப்பதற்கான உபகரணங்கள் மற்றும் தீவனத் தொகையுடன் 1,20,000 கோழிகுஞ்சுகள் கொள்முதல் செய்ய ரூ.225 இலட்சம் நிதி வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டத்தில் மொத்தம் 400 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.450 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஒரு பெரிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, இதுபோன்ற கோழிப்பண்ணை நிறுவனங்களைத் தொடங்க மற்றவர்களிடையே ஆர்வத்தை உருவாக்குகிறது.

### 11.4.2 நாட்டுக்கோழி வளர்ப்பின் மூலம் தொழில் முனைவோரை உருவாக்குதல்

கிராமப் பகுதிகளில் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்தவும், நாட்டினக் கோழி வளர்ப்பை பிரபலப்படுத்துவதற்காகவும், கோழி வளர்ப்பில் தொழில்முனைவோராக மாற்றுவதற்கும் 388 ஊராட்சி ஒன்றியங்களில் 1925 விவசாயிகளுக்கு தலா 1000 நாட்டின கோழிக்குஞ்சுகள், ஒரு மாதத்திற்கான தீவனம் மற்றும் கோழிக்குஞ்சு பொரிப்பான் கொள்முதல் செய்வதற்கு 50 சதவீதம் மானியம் வழங்க மொத்தம் ரூ.14.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டதால் கிராமப்புற மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு கிடைக்கிறது.

### 11.4.3 துறைப் பண்ணைகளில் செயல்படும் கோழி அலகுகள்

துறையின் நான்கு பண்ணைகளில் கோழிப்பண்ணை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் முன்மாதிரி பண்ணைகளாகவும் விஞ்ஞான முறையில்

கோழி வளர்ப்பதற்கான செயல்விளக்க அலகுகளாகவும் விளங்குகின்றன.

**அட்டவணை 10: துறைப்பண்ணைகளில் பராமரிக்கப்படும் கோழியினங்கள்**

| வ. எண் | பண்ணையின் பெயர் | இனங்கள் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) | அசில் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | வனராஜா, கிரிராஜா |
| 3 | மாவட்ட கால்நடை பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | அசில் |
| 4 | கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்) | வனராஜா, அசில், நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன், ரோட் ஐலாண்ட் சிவப்பு, பெல்ட்ஸ்வில்லி வெள்ளை வான்கோழி மற்றும் ஜப்பானிய காடை |

### 11.4.3.1 ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் நாட்டுக் கோழி இனப்பெருக்க வளாகம்

மாநிலத்தில் நிலவும் நாட்டுக் கோழிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.6.74 கோடி ஒதுக்கீட்டில், வளரும் கோழிகள், முட்டை கோழிகளுக்கான கொட்டகைகள் மற்றும் குஞ்சு பொறிப்பகம் கொண்ட கோழி இனப்பெருக்க வளாகம் ஒன்று தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. தீவிர கோழி வளர்ப்பு முறையின் கீழ் நாட்டுக் கோழிகளை வளர்ப்பதற்கு கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஆண்டுக்கு 10 முதல் 12 இலட்சம் கோழிக் குஞ்சுகள் பொரிக்கும் வண்ணம் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் கட்டப்பட்டுள்ளது.

### 11.4.3.2 மாவட்ட கால்நடை பண்ணை, அபிஷேகப்பட்டியில் கோழி இனப்பெருக்க வளாகம்

நல்ல தரமான நாட்டுக்கோழிக்குஞ்களை விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் திருநெல்வேலி மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் இயங்கும் அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில், 2021 - 22 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 60:40 என்ற

வீதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் ரூ.942.31 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட உள்ளது. முதல் தவணையாக ரூ.471.16 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக்குஞ்சு பொரிப்பக கட்டிடப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்த நாட்டுக்கோழி இனப்பெருக்க பண்ணை மூலம், ஒவ்வொரு வாரமும், 10,000 கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, வருடத்திற்கு சுமார் 5 இலட்சம் கோழிக்குஞ்சுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

## 11.5 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TN IAMP)

பல்வேறு துறைகளை ஈடுபடுத்தி உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையும் ஒன்று. கால்நடை பராமரிப்புப் பணிகள், 34 மாவட்டங்களை உள்ளடக்கி 66 உப வடிநிலங்களில் ரூ.38 கோடியில் 6 ஆண்டு கால அளவில்

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கால்நடை பராமரிப்பு முக்கிய பணிகளான பால்வள ஆர்வலர் குழுக்கள் அமைத்தல், கன்றுகளுக்கு குடற்புழு நீக்க மேலாண்மை, மடிவீக்க நோய் மேலாண்மை, மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம், திட்டமிடப்பட்ட இனப்பெருக்கம், விவசாயிகளின் இருப்பிடத்திலேயே செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் தீவன அபிவிருத்தி முதலிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை 43 உபவடி நிலப்பகுதிகளில் 2450 விவசாயிகள் அடங்கிய 98 பால்வள ஆர்வலர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன, 16950 கிடேரிக் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது, 16950 கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்பு கட்டிகள் வழங்கப்பட்டுள்ளன, 26397 பசுக்களுக்கு மடிவீக்க நோய் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது, 2700 மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்ட இனப்பெருக்கத்தின் கீழ் 26453 பசுக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 628208 பசுக்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே

மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2944 ஹெக்டேர். தீவன சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்கண்ட நடவடிக்கைகளால் 2.56 இலட்சம் விவசாயிகள் பயனடைந்து, 1.45 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.

2022-23ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புப் பணிகள் மேலும் 9 உப வடிநில பகுதிகளுக்கு விரிவு படுத்தப்பட உள்ளது. அதன்படி மொத்தமாக 9300 கிடேரிக் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம், 9300 கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்பு கட்டிகள், 15366 பசுக்களுக்கு மடிவீக்க நோய் சிகிச்சை, 1488 மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம்கள், திட்டமிடப்பட்ட இனப்பெருக்கத்தின் கீழ் 14880 பசுக்களுக்கு சிகிச்சை, 215900 பசுக்களுக்கு விவசாயிகளின் இருப்பிடத்திலேயே செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளுதல், 1607 ஹெக்டேர் தீவன சாகுபடியின் கீழ் கொண்டு வருதல் ஆகிய பணிகள்2022-23ம் ஆண்டில் ரூ.8.78 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## 11.6 கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்

சேலம் மாவட்டம் தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் அமைந்துள்ள கால்நடைபராமரிப்புத் துறைக்கு சொந்தமான 1102.25 ஏக்கர் பரப்பில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையமானது ரூ.564.44 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

### 11.6.1 குறிக்கோள்கள்

1. விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளும் படியான நிரூபிக்கப்பட்ட அறிவியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகள் நிறுவப்படும். உயர் மரபுத்திறன் கொண்ட கன்றுகள் / கோழி குஞ்சுகள் விவசாயிகள் தங்களின் கால்நடை / கோழியின வளத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும்.
2. கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவு தொழில் நுட்பங்கள்

ஆகியவற்றில் பிரத்யேக மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வாய்ப்பாக அமையும்.

3. கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவு தொழில் நுட்பங்கள் ஆகியவற்றில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பிற்கான வசதிகள் உருவாக்கப்படும்.
4. இந்த ஆராய்ச்சி நிலையமானது மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் களத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிவதற்கும் அதற்கு தகுந்த தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகளை உருவாக்கும்.
5. விவசாயிகள் மற்றும் கள கால்நடை மருத்துவர்களின் தேவைக்கேற்ப பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு திறன் மேம்படுத்தப்படும்.
6. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோருக்கு தேவைப்படும் பல்துறை சார்ந்த அறிவுரைகள் வழங்குவதற்கும், கால்நடை உற்பத்தி பொருட்களை முறையாக சந்தைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும்.

இந்நிறுவனத்தை ஆசியாவில் ஒரு புகழ்பெற்ற நிறுவனமாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது, கல்வி, ஆராய்ச்சி, உற்பத்தி மற்றும் செயலாக்கம், கால்நடைத் துறை தொடர்பான விரிவாக்கம் மற்றும் வணிக வளாகங்கள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் உள்ளன. ஒன்றோடொன்று தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் பத்து முக்கிய வளாகங்களாக பின்வருமாறு அமையவுள்ளன:

1. **கால்நடைப் பண்ணை வளாகம்**- இவ்வளாகத்தில் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் இடம்பெறும்.

2. **பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வளாகம்**– இவ்வளாகத்தில் கலப்பின கறவை மாட்டுப்பண்ணை, பால் பதனிடுதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வசதி, மாட்டுத்தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை தயாரிப்பு அலகுகள் இடம் பெறவுள்ளன.

3. **மீன்வள செயல்முறை வளாகம்**- இவ்வளாகத்தில் தீவிரமுறையில் காற்றுப் புகுத்திகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதி, நவீன மீன் விற்பனையகம், மீன் வளர்ப்புடன் கூடிய நீர்த் தாவர வளர்ப்பு பிரிவு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு பிரிவு ஆகியவை அமைக்கப்பட உள்ளன.

4. **முதுநிலைக் கல்வி/ பட்ட மேற்படிப்பு வளாகம்**- இவ்வளாகத்தில் நிர்வாகக் கட்டடம், கல்வி வகுப்பறை கட்டங்கள் மற்றும் ஆய்வகங்கள், ஆசிரியர் அறைகள், விடுதிகள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவை நிறுவப்பட்டு வருகின்றன.

5. **விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகம்**- இவ்வளாகத்தில் விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி மையம், உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைபண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான விடுதிகள் ஆகியவை நிறுவப்பட்டு வருகின்றன.

6. **ஆராய்ச்சி வளாகம்**- கால்நடை இனப்பெருக்கம் மற்றும் தொழில் நுட்பப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகள்ஆகியவற்றை உள்ளடக்கியது.

7. **தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம்**- தொழில் உருவாக்க மையமும், தொழில் ஒருங்கிணைப்பு மையமும் இடம்பெறும்.

8. **இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம்**- செம்மறியாடு, வெள்ளாடு, கோழி மற்றும் பன்றியினங்களுக்கென பிரித்தியேக வசதிகள் ஏற்படுத்தப்படும்.

9. **பசுந்தீவன ஆராய்ச்சி மண்டலம்** – இத்தீவன ஆராய்ச்சி வளாகத்தில் தீவனப்பயிர் உற்பத்தி, மரவகை தீவனப்பயிர்களுடன் கூடிய மேய்ச்சல் நிலம், உலர் தீவன உற்பத்தி, ஊறுகாய்ப்புல் உற்பத்தி மற்றும் தீவன விதை உற்பத்தி ஆகியவற்றிற்கான பரப்புகள் வரையறுக்கப் பட்டுள்ளன.

10. **பொதுமக்கள் கலந்துறையாடும் பகுதி**- இப்பகுதியில் குழந்தைகள் பூங்கா, கால்நடை அறிவியல் மற்றும்

தொடர்புடைய துறைகளில் பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்தும் அரங்கு, வாகன நிறுத்தம், ஓய்வு அறைகள், சில்லறை அங்காடி, வங்கிகள் மற்றும் தானியங்கி பணம் வழங்கும் மையம் ஆகியவை அமைக்கப்படும். மேலும் கால்நடை உற்பத்தி பொருட்கள், விவசாய உள்ளீடுகள், பசுந்தீவன உள்ளீடுகள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை விற்பனை செய்வதற்கான விற்பனையகங்களும் அமைக்கப்படும்.

திறன் மேம்பாட்டு வளாகம், தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம், ஆராய்ச்சி வளாகம், இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம், முதுநிலைக் கல்வி வளாகம் மற்றும் கால்நடைப் பண்ணை வளாகத்தில் உள்ள கோழியினப் பிரிவுகள், ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாக அலுவலகம், முக்கிய விருந்தினர் இல்லம் மற்றும் நுழைவு வாயில் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் கலந்தாலோசிக்கும் பிரிவின் கட்டுமானப் பணிகளும் பொதுப்பணித்துறை வாயிலாகவே செயல்படுத்தப்பட உள்ளன.

கால்நடைப் பண்ணை வளாகத்தில் அமையவிருக்கும் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப்பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகத்தில் அமையவிருக்கும் உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைப் பண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புகள் ஆகியவற்றின் பணிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீன்வள செயல்முறை வளாகத்தில் தீவிர முறையில் காற்றுப்புகுத்திகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் பிரிவானது மீன்வளத்துறை மூலமாகவும், மீன்வளர்ப்புடன் கூடிய நீர்த்தாவர வளர்ப்பு மற்றும் அலங்கார

மீன்வளர்ப்பு பிரிவுகள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகம் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நெடுஞ்சாலைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை ஆகியவற்றின் வாயிலாகவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 11.6.2 விவசாயிகளுக்கான பயிற்சி, உயர் மரபுத்திறன் கொண்ட ஜெர்ம்ப்ளாசம் கிடைப்பது, சந்தை தகவல்களை வழங்குதல்

விவசாயிகளுக்கு சிறந்த மரபுத் தன்மை உடைய கால்நடைகள் மிகக்குறைந்த விலையில் கிடைப்பதால் அவர்கள் தங்கள் பண்ணையின் தரத்தை உயர்த்தவும் அதன் வாயிலாக கால்நடைகளின் உற்பத்தி திறனை பெருக்குவதோடு, அதிக இலாபம் சம்பாதிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நவீன வர்த்தக வசதிகளின் விளைவாக இடைத்தரகர்கள் நீக்கப்படுவதால் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல சந்தை மதிப்பை பெற்றுத் தர இயலும். அழிவின் விளிம்பில் உள்ள உள்நாட்டு கால்நடை இனங்கள்

பாதுகாக்கப்படும். கால்நடை வளர்ப்பில் வணிக ரீதியான முயற்சிகளில் தொழில் முனைவோருக்கான புதிய உத்திகள் உருவாக்கப்படும்.

கால்நடை உற்பத்தி பொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரிப்பிற்கான புதிய உத்திகள் தொழில் முனைவோருக்கான வியாபார நோக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்.

### 11.6.3 தொழில் முனைவோருக்கான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் சந்தை நுண்ணறிவினை வழங்குதல்

பல்நோக்குடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணை வசதிகள் ஆற்றல் மிக்க தொழில் முனைவோருக்கு கால்நடை வளர்ப்பில் தனிக்களத்தினை உருவாக்க ஒரு வாய்ப்பாக அமையும்.

மாநிலத்திற்குள் மற்றும் மாநிலத்திற்கு வெளியே சந்தைகளில் உள்ள பல்வேறு பொருட்களின் விலைகள் குறித்து தொழில் முனைவோருக்கு சந்தை நுண்ணறிவு கிடைக்கும். தொழில் முனைவோருக்கு ஏற்றுமதி வசதியும் செய்து தரப்படும்.

**11.6.4 மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு கற்றலுக்கான உலகத்தர வசதிகளை வழங்குதல்.**

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள் புகழ் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் நல்ல வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதோடு கூட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் வாய்ப்புகள் அமையும்.

**11.6.5 நுகர்வோர்**

நுகர்வோர்களுக்கு தரம் உயர்ந்த, சுத்தமான கால்நடை உற்பத்தி பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கும். மின்னணு வர்த்தக வசதியானது பலதரப்பட்ட புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட கால்நடை உற்பத்தி பொருட்கள் எளிதில் கிடைக்க வழிவகுக்கும்.

கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று ரூ.196.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பெரிய அளவிலான திட்டத்தின் சுமூக செயல்பாட்டிற்குத் தேவையான நீரை தடையற்ற முறையில்

வழங்கிட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இத்திட்டத்திற்கு நாளொன்றுக்கு தேவையான 10 மில்லியன் லிட்டர் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக காவிரி நதிப்பாதையிலுள்ள கூடக்கல் என்ற இடத்திலிருந்து இவ்வளாகத்திற்கு சுமார் 155 கிமீ தொலைவிற்கு குழாய்கள் வாயிலாக குடிநீர் கொண்டுவரும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினை நடப்பு நிதி ஆண்டிற்குள் செயல்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு அனைத்துப் பணிகளும் முழுவீச்சில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

### 11.7 நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை

இராஜபாளையம், சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகிய சிறந்த நாட்டின நாய் இனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்த நாட்டின நாய்களைப் பாதுகாத்து இனப்பெருக்கம் செய்ய 1980ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரிவிலிருந்து பெறப்படும் நாய்க்குட்டிகள் பொதுமக்களுக்கு பதிவு மூப்பு

அடிப்படையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அரசு ஆணை (டி) எண்,297 கா.ப,மீ மற்றும் மீ.வ துறை (காப4) நாள் 18.11.2021.

**12. கால்நடை மருத்துவத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள்**

கால்நடை பன்முக மருத்துவமனைகள், கால்நடை பெருமருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், கோழி நோய் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நோய் நிகழ்வியல் பிரிவு மூலம் கால்நடைகளின் உடல்நலம் பேணுதல், நோய் கட்டுப்படுத்துதல், மருத்துவ சேவைகள் மற்றும் இனவிருத்தி சேவைகள் ஆகியவற்றை இத்துறை வழங்கி வருகிறது. இத்துறையில் எட்டு கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகிய 13 பண்ணைகள் இயங்கி வருகின்றன.

கால்நடை மருத்துவ நிலையங்கள் நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் மையங்களாகவும், அறிவுசார் மையங்களாகவும் மற்றும் விரிவாக்க மையங்களாகவும் உருமாறியுள்ளன.

துறையினால் வழங்கப்படும் எந்த ஒரு சேவையையும் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்தில் விவசாயிகள் பெற்றுக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால், அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகிறது. உள்-கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதன் வாயிலாக, கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்கும். ஊரக மேம்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மாநில அரசின் நிதி, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF), ஒன்றிய அரசின் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP), கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம் (ESVHD) மூலம் துறையின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களின்கீழ் 2,076 புதிய கால்நடை மருத்துவ நிலைய கட்டடங்கள் ரூ.631.72 கோடி மொத்த செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும் ரூ.52.31 கோடி நிதி

ஒதுக்கீட்டில் 80 கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் நபார்டு ஆர்.ஐ.டி.எப் XXVII திட்டத்தின் கீழ் ரூபாய் 57,46 கோடி செலவில் 88 கால்நடை நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 1,658 கால்நடை மருந்தக வளாகங்களில் தண்ணீர் தொட்டிகள் ரூ.3.95 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 11: கட்டமைப்பு மேம்பாடு கட்டுமானப் பணிக்கான திட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கட்டடங்களின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மாநில நிதி | 34 | 60.67 |
| 2 | கால்நடை மருத்துவ நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் (ESVHD) | 256 | 25.51 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கட்டடங்களின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 3 | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP) | 100 | 28.66 |
| 4 | நபார்டு (NABARD) | 1,854 | 626.66 |
| மொத்தம் | | **2,244** | **741.50** |

**13. கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி வரைவுத் திட்டம்**

**13.1 கால்நடை கணக்கெடுப்பு**

கால்நடை கணக்கெடுப்புப்பணி 1919-20 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கால்நடை கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை உள்ளடக்கியது.

தற்போதைய 20வது கால்நடைக் கணக்கெடுப்பு 2019 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி கையடக்க கணினியை பயன்படுத்தி கணக்கெடுக்கப்பட்டது.

கால்நடை கணக்கெடுப்புப் பணி 100 சதவிகிதம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படுகிறது.

### 13.2 ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்

கடந்த 1977-78 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் மாதிரி வரைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தில் ஒரு ஆண்டானது கோடைக்காலம், மழைக்காலம் மற்றும் குளிர்காலம் என மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, பருவ வேறுபாடுகளால் ஏற்படும் உற்பத்தி மாற்றங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 விழுக்காடு கிராமங்களில் மேற்கூறிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, பல்வேறு திட்டங்களை வகுக்கவும், மேற்பார்வையிடவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் அவற்றின் விளைவுகளால் ஏற்படும் தாக்கத்தைக் கணக்கிடவும் மாதிரி வரைவுத் திட்டத்தின்மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள் பயன்படுகின்றன.

## 14. ஜல்லிக்கட்டு - தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம்

ஜல்லிக்கட்டு என்பது பொங்கல் திருவிழாவின் போது தமிழ்நாட்டில் கிராம மக்களிடையே நடத்தப்படுகின்ற பாரம்பரியம் மிக்க கலாச்சார நிகழ்ச்சியாகும். இது 5,000 ஆண்டு பழமை வாய்ந்ததுடன், தமிழ்நாட்டின் சமூக பண்பாட்டு பழக்கங்களுடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ளதாகும்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் மாநில அரசிதழில் அறிவிக்கப்படும் இடங்களில் மட்டுமே நடத்தப்படுகின்றன. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு விலங்குகள் வதைத் தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகள், 2017இன் வரையறைகளுக்கு உட்பட்டவை ஆகும்.

தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததன் வாயிலாக, பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம்), 2017 முறையாக பின்பற்றப்படுவதை இத்துறை உறுதி செய்துள்ளது. தமிழகத்தின் கலாச்சார உணர்வுகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், காளைகள் தேவையில்லாத துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவதும் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்து, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது காளை உரிமையாளர்கள், மாடு தழுவும் வீரர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் பொறுப்புகளை விளக்கும் விளம்பரப் பதாகைகள் முக்கிய இடங்களில் வைக்கப்படுகின்றன. இவற்றில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை விளக்கப்படுகின்றன.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு முன்பாக, நடத்தப்படும்போது மற்றும் நடந்து முடிந்த

பிறகு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மிகச் சரியாகப் பின்பற்றப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் காரணமாக மாநிலத்தில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பெருமளவில் தவிர்க்கப்படுகிறது. பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 2017)இன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் மே மாதம் வரை நடத்தப்படும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் மாநில அரசிதழில் அறிவிக்கப்படுகின்றன. அரசு அனுமதி வழங்கப்படாத இடங்களில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் மேற்படி சட்டத்திற்கு புறம்பானவையாகக் கருதப்படுகின்றன.

2022-ஆம் ஆண்டில் 221 ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. பிராணிகள் வதை தடுப்பு சட்டம் (ஜல்லிக்கட்டு நடைமுறை) விதிகள் 2017இன்படி, ஜல்லிக்கட்டு நிகழ்வுகளின் போது ஏற்படும் விதிமீறல்கள் சட்டப்படி முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## 15. பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள்

### 15.1 தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் செயல்பாடுகள் (Tamil Nadu Animal Welfare Board)

பிராணிகளுக்கு உணர்வுகளும், உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமும் நம்மை போன்றே அமையப்பெற்றுள்ளன என்று அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, அவற்றின் அடிப்படைத் தேவைகளை நாம் மதித்து நிறைவேற்ற வேண்டும். பிராணிகள் மனிதத் தன்மையுடனும் இரக்கத்துடனும் நடத்தப்பட வேண்டும் என்பதை இந்திய அரசியலமைப்பு சட்ட விதி 51(A) (g), உணர்த்துகிறது - "இந்திய நாட்டின் இயற்கை வளங்களான காடுகள், குளங்கள், ஆறுகள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பது, மேம்படுத்துவது மற்றும் அனைத்து உயிரினங்களிடமும் பற்றுதலுடன் நடந்து கொள்வது ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை". எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு இணங்க, தமிழக அரசு அரசாணை (நிலை) எண்.208 கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத் (கா.ப3) துறை, நாள்.24.10.2018இன் வழி "தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம்"

தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியமானது தமிழகத்தில் உள்ள பிராணிகளின் நலன் குறித்த பிரச்சனைகளை கண்காணித்து தீர்க்கும் வகையில் செயல்படும்.

மத்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகிய இந்திய பிராணிகள் நல வாரியம், அந்தந்த மாநில பிராணிகள் நல வாரியங்கள் மூலமாக பிராணிகள் வதை தடுப்பு சட்டம் 1960இன் நோக்கங்களை நிறைவேற்றுகிறது.

தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் செயல்படு-வார்கள். இவ்வாரியத்தின் இதர உறுப்பினர்களாக தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறைகளின் முதன்மைச் செயலாளர்கள், பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கத்தின் இயக்குநர்கள், பதிவாளர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் விளங்குகின்றனர். இந்த வாரியம்

பொதுக்குழு, நிர்வாகக்குழு மற்றும் நிலைக்குழு என்ற மூன்று நிலைக் குழுக்களைக் கொண்டுள்ளது.

பிராணிகள் நலம் குறித்து "பிராணிகள் வதை தடுப்புச் சட்டம் 1960" இன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள கால்நடைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கான விதிகள் (Transportation of Animal Act, 1978), கால்நடைகளை சந்தைப்படுத்துவதற்கான விதிகள் (Regulation of Livestock Markets Rules 2016), நாய் இனப்பெருக்க மற்றும் சந்தைப்படுத்துவதற்கான விதிகள் (Dog Breeding and Marketing Rules 2016), செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்களைப் பதிவு செய்யும் விதிகள் (Pet Shop Rule 2018), நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை விதிகள் (Animal Birth Control 2001) மற்றும் பிராணிகள் வதைத் தடுப்பின் பொருட்டு பிராணிகள் வதைத் தடுப்பு சங்கங்களை (Society for Prevention of Cruelty to Animals) நிறுவி முறைப்படுத்துதல் போன்ற அனைத்து விதிகளும் இந்த பிராணிகள் நல வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

## 15.2 பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம் (Society for Prevention of Cruelty to Animals)

அனைத்து மாவட்டங்களிலும் விலங்குகள் வதைத் தடுப்பு சங்கங்கள் தோற்றுவிக்கப்படுதல் மற்றும் முறைப்படுத்துதலானது விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960 (1960 இன் 59வது சட்டம்) பிரிவு 38, உட்பிரிவு 1ன்கீழ், ஒன்றிய அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண்.S.O.271(E), நாள்.26.03.2001-ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கங்களின் பணிகள், விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960இன் விதிகளை அமல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உதவுவதும், தன் கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கான துணை விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதும், மருத்துவ நிலையங்கள், விலங்கு தங்குமிடங்களை அமைப்பதும் ஆகும்.

உள்ளாட்சி அமைப்புகளால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்படும் அனைத்து வயதான பசுக்கள் காப்பகங்கள்

மற்றும் கால்நடை பட்டிகள், விலங்கு வதைத் தடுப்பு சங்கம் அல்லது பிராணிகள் நல வாரியத்தால் இணைந்து நடத்தப்படும்.

எந்தவொரு பிராணிகள் வதைத் தடுப்பு சங்கமும் சிறப்பாக மற்றும் திறமையாக நடத்தப்படுவதற்கு வழிகாட்டுவதே தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் பணி ஆகும். மாநில அரசு, வாரியத்துடன் கலந்தாலோசித்து, தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு பிராணிகள் வதைத் தடுப்பு சங்கத்திற்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்கலாம்.

### 15.3 விலங்குகள் இனவிருத்தி கட்டுப்பாடு திட்டம்

ஆதரவற்ற நாய்கள் அபரிமிதமாகப் பெருகுவதைத் தடுப்பதற்காகவும், வெறிநாய்க்கடி நோய் நிகழ்வுகளைக் குறைப்பதற்காகவுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தெரு நாய்களின் எண்ணிக்கையை நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசு பிராணிகள் கருத்தடை (நாய்கள்) விதி, 2001ஐ வகுத்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஆதரவற்ற நாய்களை மனிதாபிமான முறையில் பிடித்து, கருத்தடை செய்து, வெறிநோய் தடுப்பூசி செலுத்தி, அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன.

நகராட்சி நிர்வாகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் ஆகியவை ஒருங்கிணைந்து, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றன.

**15.4 செல்லப்பிராணிகள் விற்பனை நிலையம்**

மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் செல்லப்பிராணி விற்பனை நிலையங்கள் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி வணிகம் செய்து வருகின்றன. இனிமேல், மாநிலம் முழுவதிலும் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்கள், மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட செல்லப்பிராணிகள் விற்பனை நிலைய விதிகள் 2018, அறிவிப்பு G.S.R.844(E) நாள் 06.09.2018இன்படி மாவட்ட

நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் மாநில பிராணிகள் நல வாரியத்தால் ஒழுங்குப்படுத்தப்படும்.

செல்லப்பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர், விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னர் ஒரு விண்ணப்பம் மற்றும் பிரமாணப் பத்திரத்துடன் திரும்பப் பெற இயலாத ரூ.5,000 செலுத்தி மாநில பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று விதிகள் குறிப்பிடுகின்றன.

அதற்குப் பிறகு, செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசு கால்நடை மருத்துவரால் ஆய்வு செய்யப்பட்டு, அவரது அறிக்கையின் அடிப்படையில், உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்தபின் பதிவு தொடரும் அல்லது ரத்து செய்யப்படும். வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட பின்னரே உரிமம் வழங்கப்படும். இதுவரை 391 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு வாரியத்தால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து செல்லபிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர்களும் தங்களுடைய விற்பனை

நிலையங்களை தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பொது அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 16. நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது ஐக்கிய நாடுகளின் பொது சபையால் 2030-ம் ஆண்டிற்காக 2015-ம் ஆண்டில் நிர்ணயித்த 17 உலகளாவிய இலக்குகளின் தொகுப்பாகும். கால்நடை பராமரிப்புத்துறை நிலையான வளர்ச்சி இலக்குகளான இலக்கு-1 (வறுமை ஒழிப்பு), இலக்கு-2 (பட்டினியின்மை) இலக்கு-3 (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு), இலக்கு- 5 (பாலின சமத்துவம்) மற்றும் இலக்கு-12 (நீடித்த நுகர்வு மற்றும் உற்பத்தியும்) ஆகியவற்றை அடைய பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி பங்களித்து வருகின்றது.

ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த/ கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற கிராமப்புற பெண்களுக்கு வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்துவதின் மூலமாக இலக்கு 1 –

வறுமையின்மை, இலக்கு 2 - பசியின்மை, இலக்கு 3-நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மற்றும் இலக்கு 5 - பாலின சமத்துவம் அடைய பங்களிக்கின்றது. 2923 கால்நடை நிலையங்கள் மூலம் கால்நடை மருத்துவ சேவைகள், இனப்பெருக்கம் மற்றும் தீவனம் மேம்பாடு, 35 நோய் கண்காணிப்பு பிரிவுகள் மூலம் நோய் கண்காணிப்பு, தடுப்பு மற்றும் கட்டுபடுத்துதல் நடவடிக்கைகள் வாயிலாக பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரித்து, இலக்கு 12 - நீடித்த நுகர்வும் மற்றும் உற்பத்தி மேம்படுத்துதல் ஆகிய இலக்குகளை அடைய பங்களிக்கின்றது.

நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து இதர துறைகளுடன் ஒருங்கிணைந்து பணி மேற்கொள்ள மாநில, மாவட்ட மற்றும் கள அலுவலகங்களில் நிலையான வளர்ச்சி பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 17. ஒழுங்குமுறை இணக்கம் மூலம் எளிதான வழிகளில் சேவைகளை மேற்கொள்ளுதல்

கால்நடை பராமரிப்புத் துறையில் மருத்துவ சேவைகள் மற்றும் திட்ட செயல்பாடுகளை எளிதாக்கவும்

அதன் ஒழுங்குமுறை விதிகளில் உள்ள சுமைகளை குறைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் உள்ள அனைத்து செல்லப்பிராணி விற்பனை நிலையங்களையும் தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்யும் நெறி முறைகளை மின்னணு வழியாக பரிவர்த்தனை செய்திடவும் (digital) அதற்கான அனுமதி மற்றும் சான்றிதழ்கள் மின்னணு மூலமே வழங்கிடவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் காலவிரயம் தவிர்க்கப்படுவதோடு எளிதான முறையில் இப்பதிவு செய்தல் மேம்படுத்தப்பட உள்ளது.

கால்நடை வளர்ப்போருக்காக கால்நடை பராமரிப்புத் துறையின் மருத்துவ சேவைகள் மற்றும் திட்ட செயல்பாடுகளை ஒரே மின்னணு மேடையில் கொண்டு சென்று அவற்றினை மேம்படுத்தி சிறப்பான கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும், ஒருங்கிணைக்கவும் டிஜிட்டல் மேலாண்மை முறையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கால்நடை மருத்துவ சிகிச்சை மேலாண்மை, கால்நடை மருத்துவ நிலைய களப்பணியாளகள், அலுவலக

பணியாளர்கள் வருகை, கால்நடை நிலையங்களிலுள்ள மருந்துகளின் இருப்பு மற்றும் தேவை விவரம், விவசாயிகளின் வீட்டிற்கு சென்று சிகிச்சை அளித்தல், மாநில மற்றும் மத்திய அரசுகளின் திட்ட செயல்பாடுகள் குறித்த விபரங்கள் தெரிவித்தல், கால்நடை சுகாதார முகாம்கள், பல்வேறு தடுப்பூசி முகாம்கள் நடைபெறும் இடம் ஜிபிஎஸ் மூலம் தெரிவித்தல் மேலும் தேதி, நேரம் பற்றிய முன்அறிவிப்புகள் போன்ற இத்தகையபணிகள் மக்களை எளிதாக சென்றடைய வழிவகை செய்யப்படுகிறது.

மேலும் இத்துறையில் உள்ள செயல்பாடுகளை எளிதாக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பழமையான சட்டங்களை நீக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1. விலங்குகளில் தொற்று, தொற்றும் தன்மை கொண்ட நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் சட்டம் 2009 கீழ் (மத்திய சட்டம் 2009ல் 27) கீழ்கண்ட சட்ட விபரங்கள் கொண்டுவரப்பட்டு, அவற்றை நீக்க பரிந்துரைக்கப்பட்டது இச்சட்டம் மாநிலத்தில் 24.04.2009 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
   - தமிழ்நாடு கால்நடை நோய் சட்டம், 1866 (தமிழ்நாடு சட்டம், XI 1866)

- தமிழ்நாடு ரிண்டர்பெஸ்ட் சட்டம், 1940 (தமிழ்நாடு சட்டம், XIX 1940)
- தமிழ்நாடு கால்நடை நோய் (திருத்தச் சட்டம்) சட்டம், 1963(தமிழ்நாடு சட்டம், 29/1863)
- தமிழ்நாடு ரிண்டர்பெஸ்ட் (திருத்தம்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 14/1964)
- கிளாண்டர்ஸ் & பார்சி சட்டம் 1899, பொது விதி 1899/13
- கிளாண்டர்ஸ் & பார்சி 1965ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டம் (1965ஆம் ஆண்டின் தமிழ்நாடு திருத்தச் சட்டம் 36)

2. மாநில சட்ட இயக்ககம், கீழ்கண்ட சட்டங்களை நீக்க பரிந்துரைக்கிறது
    - "தமிழ்நாடு கால்நடை மருத்துவர் பதிவுச் சட்டம், 1957 (தமிழ்நாடு சட்டம் 1957 XXI)
    - தமிழ்நாடு கால்நடை மருத்துவர் பதிவுச் (திருத்த சட்டம்) சட்டம், 1993
3. தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுச் சட்டம், 1940, 2019 ஆம் ஆண்டு கால்நடை இனப்பெருக்க சட்டத்தின் கீழ் உட்படுத்தப்படும்.

## 18. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

பசு மற்றும் எருமை இனபெருக்கம் பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பது இன்றியமையாத செயலாகும். தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை 2003-ம் ஆண்டில் நிறுவப்பட்டு, மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் எருமை வளர்ப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 1. முகமையின் முதன்மை நோக்கம்

இம்முகமையின் முதன்மை நோக்கம், இனப்பெருக்கம் செய்யக்கூடிய வயதிலுள்ள அனைத்து பசுக்களையும், எருமைகளையும் வரையறுக்கப்பட்ட இனப்பெருக்கத்தின் கீழ் கொண்டு வந்து பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தித்திறனை அதிகரிப்பதாகும்.

### 2. செயல்பாடுகள்

- திரவ நைட்ரஜன் கொள்கலன்கள், உறைந்த விந்து சேமிப்பு மற்றும் போக்குவரத்து கொள்கலன்கள், உபகரணங்கள் மற்றும் பிற உள்ளீடுகளை கொள்முதல் செய்து வழங்குவதன் மூலம் செயற்கை

முறைகருவூட்டல் மையங்களை வலுப்படுத்துதல், விந்து சேமிப்பு மற்றும் விநியோக மையங்களை வலுப்படுத்துதல் மற்றும் விந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்துதல்

- மாடுகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க உறைந்த விந்து உற்பத்திக்கு உயர் மரபணு தகுதி கொண்ட காளைகள் கிடைக்க வழிவகை செய்தல்.நல்ல தரமான நாட்டு மாடுகளை உற்பத்தி செய்யவும், பாதுகாக்கவும், கருமாற்று திட்டம் செயல்படுத்த வழிவகை செய்தல்.
- இனப்பெருக்கம் செய்யக்கூடிய பசு மற்றும் எருமைகள்அனைத்தையும் செயற்கை முறை கருவூட்டலின் கீழ் கொண்டு வர விவசாயிகளின் வீட்டிற்கே சென்று உயர் மரபணு தகுதி கொண்ட காளைகளின் உறைவிந்து கொண்டு செயற்கை முறை கருவூட்டல் செய்யும் பணி மேற்கொள்ளுதல்.
- துயர்துடைப்பு மற்றும் இன்னல் மேலாண்மைக்காக கால்நடை காப்பீடுதிட்டம் செயப்டுத்துதல்.
- கால்நடை பராமரிப்புத் துறையின் பல்வேறு திட்டங்களின் கீழ் உள்ளீடுகளை கொள்முதல் செய்தல்.

## 3. மேற்கொள்ளப்பட்ட பணிகள்

### 3.1 உறைவிந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்துதல்

தரமான உறைவிந்து உற்பத்தி செய்ய தஞ்சாவூர் ஈச்சன்கோட்டையில் உள்ள உயரின கால்நடை பெருக்கு பண்ணை, கிருஷ்ணகிரி ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணை ஆகியன,அமுக்கவடுகலன்நீர் சுத்திகரிப்பு அலகுகள், இன்குபேட்டர்கள், ஃபோட்டோ மீட்டர்களுக்கான டைலுட்டர்கள் மற்றும் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப்பண்ணைக்கு உறைவிந்து நிரப்பி சீல் செய்யும் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்து வழங்கி ரூ.1.61கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தப்பட்டன. உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணையில் ஆய்வகத்தின் பழுது நீக்கம்,பணியாளர்களுக்கான அறை அமைக்கும் பணி எடுத்துகொள்ளப்பட்டுள்ளது.

## 3.2 உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட பொலிகாளைகள் கிடைக்க வழிவகை செய்தல்

உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணைக்குஉயர் மரபணுத்திறன் கொண்ட5 கலப்பின ஹோல்ஸ்டின் பிரிசியன், 3 சாகிவால்,14 கலப்பினஜெர்சி காளைகளும் , ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப்பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட 5 ஜெர்சி 5முர்ரா, பொலிகாளைகளும், ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட ஒரு சாகிவால் பொலிகாளையும் வழங்க வழிவகை செய்யப்பட்டது.

## 3.3 உறைவிந்து சேமிப்பு மற்றும் விநியோக மையங்களை வலுப்படுத்துதல்

திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து குச்சிகள் சேமிப்பு மற்றும் விநியோக முறையை வலுப்படுத்த ரூ. 2.5 கோடி செலவில், 47 லிட்டர் கொள்ளளவு கொண்ட 120 உறைவிந்து குச்சி சேமிப்பு குடுவைகள், 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட 800 திரவ நைட்ரஜன் சேமிப்பு குடுவைகள் மற்றும் இதர பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மூவாயிரம் லிட்டர்கள்

கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்பு கொள்கலன்கள் 5 இடங்களில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**3.4 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை பலப்படுத்துதல்**

தரமான செயற்கை முறை கருவூட்டல் சேவைகள் வழங்க 1600செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு தேவையான 0.5 லிட்டர், 3-4 லிட்டர், மற்றும் 30-35 லிட்டர் கொள்ளளவு கொண்ட உறைவிந்து குச்சி சேமிப்பு குடுவைகள் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் உபகரணங்கள்ரூ. 4.00 கோடி செலவில் வழங்கப்பட்டன.

**3.5 கருமாற்று தொழில் நுட்பம்**

கிருஷ்ணகிரி மாவட்ட, ஓசூர், மாவட்ட கால்நடை பண்ணையில் கருமாற்று மற்றும் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பம் ரூ.4.55 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூன்றாண்டுகளில் 84 உயர் மரபணு கொண்ட பொலிகாளைகள் (சிந்தி-34, காங்கேயம்-20, உம்பளாச்சேரி-10, புலிக்குளம் – 10, பர்கூர் - 10) மற்றும் 85 பொலிகாளைகள் உற்பத்தி செய்ய தாய் பசுக்கள் (சிந்தி-35, காங்கேயம்-20,

உம்பளாச்சேரி-10, புலிக்குளம்-10, பர்கூர்-10) உற்பத்தி செய்யகுறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில் நுட்பம் மேற்கொள்ள ஆய்வுக்கூடம் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கருமாற்று தொழில் நுட்பப்பணிக்கு, பால் உற்பத்தி பதிவு செய்யப்பட்ட 23 காங்கேயம், ஒரு பர்கூர், 2 புலிக்குளம் பசுக்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.மொத்தம் 23 டோனர் பசுக்களிலிருந்து (சிந்தி-7, காங்கேயம்-13, புலிக்குளம்-2, பர்கூர்-1) 487 கரு (சிந்தி - 444, காங்கேயம் - 34, புலிக்குளம்-8, பர்கூர்-1) சேகரிக்கப்பட்டு 330 கரு (சிந்தி -287, காங்கேயம் - 34, புலிக்குளம்-8 பர்கூர் -1) மாற்றப்பட்டு 157 கரு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 34 கன்றுகள் (சிந்தி-25, காங்கேயம்-6, புலிக்குளம்- 3 ) பிறந்துள்ளன.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகத்தின் கீழ் நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.2.51 கோடி செலவில் 105 காங்கேயம் மற்றும் 55 பர்கூர் பசுக்கள் உற்பத்தி செய்ய கருமாற்று தொழில் நுட்பம் செயல்படுத்தப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ்17 டோனர் பசுக்கள் (காங்கேயம் - 12, பர்கூர் - 5) பராமரிக்கப்பட்டு 184 கரு

(காங்கேயம்-134, பர்கூர்-50 ) உற்பத்தி செய்யப்பட்டு, 86 கரு (காங்கேயம்-66, பர்கூர் -20) மாற்றப்பட்டு, 33 கரு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு பர்கூர் 3 காங்கேயம் கன்று பிறந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3.6 உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்**

உள்நாட்டு கால்நடை இனங்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம் அந்தியூரில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகம் மூலமாக பர்கூர் இன ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கு ரூ.5.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி ஐந்தாண்டுகளுக்கு திட்டமிடப்பட்டு இத்திட்டத்தின் மூலம் பர்கூர் கிடேரி கன்றுகள் கொள்முதல், வேலி அமைத்தல், நிலம் சீர்படுத்துதல், நுண்ணீர்பாசன வசதி அமைத்தல், உபகரணங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துருசனம்பாளையத்தில் நிர்வாக அலுவலகம் மற்றும் கால்நடை பண்ணை, சங்கராபாளையம் மற்றும் தட்டாக்கரை கிராமங்களில் தீவனப்பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி

நிலையத்தில் மொத்தம் 126 பர்கூர் மாடுகள் (113 பசு / கிடேரி மற்றும் 13 காளை / காளை கன்று) பராமரிக்கப்படுகின்றது.

**3.7 அதிக உற்பத்தித்திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினை பயன்படுத்தி அதிக அளவில் பசு மற்றும் எருமைகளை செயற்கை முறை கருவூட்டலின் கீழ் கொண்டுவந்து மேம்படுத்த கால்நடை வளர்ப்போரின் வீட்டிற்கே சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்வது.**

50% க்கும் குறைவான எண்ணிக்கையில் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில், சிறந்த கன்றுகள் பிறப்பதற்கும், பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கும் விவசாயிகளின் வீட்டிற்கே சென்று இனபெருக்க வயதில் உள்ள மாட்டினங்களில் செயற்கைமுறை கருவூட்டல் சேவை வழங்கும் நோக்கத்துடன் நாடு தழுவிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருவண்ணாமலை, விருதுநகர், விழுப்புரம், சென்னை, கடலூர், காஞ்சிபுரம்,

நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, சேலம், உதகமண்டலம், திருவள்ளூர், ஆகிய 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 01.08.2020 முதல் 31.07.2021 வரையிலான காலகட்டத்தில் 6.50 லட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்ய அதே 13 மாவட்டங்களில் ரூ.11.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 7.64 லட்சம், கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல். செய்யப்பட்டுள்ளன, இதுவரை 81,925 கன்றுகள் பிறந்துள்ளன.

திட்டத்தின் மூன்றாம் கட்டம் அதே 13 மாவட்டங்களில் 01.08.2021 முதல் 31.05.2022 வரையிலான காலகட்டத்தில் 13.95 லட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்ய குறியீட்டுடன் ரூ.49.47 கோடி நிதி அனுமதியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை மொத்தம் 5.42 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல். செய்யப்பட்டுள்ளன.

## 3.8 தேசிய கால்நடை இயக்கம்- துயர் துடைப்பு மற்றும் இன்னல் மேலாண்மை

தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் கால்நடை காப்பீடு திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. ரூ. 13.08 கோடி செலவில் 2.50 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு (பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி) அனைத்து மாவட்டங்களிலும் காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டு 2.50 இலட்சம் கால்நடை அலகுகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## 3.9 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவுதல்

மாவட்டங்களில் உள்ள 32 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவ அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

## 19. முன்னேற்றத்தை நோக்கிய பயணம்

கால்நடை வளர்ப்பு என்பது ஒரு நிலையான வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் நடவடிக்கையாகும், இது பெரும்பான்மையான கிராமப்புற குடும்பங்களுக்கு, குறிப்பாக நிலமற்ற மற்றும் குறு விவசாயிகளுக்கு வாழ்வாதார ஆதரவை வழங்குகிறது. இது தொடர்ச்சியான வேலைவாய்ப்பை வழங்கும் மற்றும் உபரி உழைப்பை பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலைக் கொண்ட ஒரு உழைப்பாளர்-தீவிரமான தொழிலாக இருப்பதால், கால்நடை வளர்ப்பு ஏழைகளுக்கு ஆதரவாகக் விளங்குகிறது.

கடந்த 34 ஆண்டுகளாக கால்நடை வளமானது, தொடர்ந்து நேரடியான வளர்ச்சி விகிதத்தைப் பெற்றுள்ளது. மாநிலத்தில் கால்நடை வளர்ப்போர் பல குழுக்கள் செயல்பட்டு கால்நடை வளத்தை முக்கிய வருமானமாக நம்பியிருப்பதால் கால்நடை உற்பத்தி திறனை பெருக்கி, 2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைவதற்கு, தேவைக்கு ஏற்ப உற்பத்தி இடைவெளியைக் குறைத்து, உற்பத்தித் திறனை அதிகரிப்பது கட்டாயமாகும்.

**முன்மொழியப்பட்ட கொள்கை முயற்சிகள்**

கால்நடை பராமரிப்பில் முக்கிய சவால்களான இன மேம்பாடு, பல்வேறு மரபணு வளங்களைப் பாதுகாத்தல், தீவனம் மற்றும் தீவனப் பற்றாக்குறை, கால்நடை நோய்களைத் திறம்படக் கட்டுப்படுத்துதல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு தொழில்நுட்பம், திறன்கள் மற்றும் தரமான சேவைகளைப் வழங்குதல், ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். மேலும், கால்நடை வளத்தின் விரைவான வளர்ச்சிக்கு, குறைந்த எண்ணிக்கையில் கால்நடைகளை வைத்துள்ள கால்நடை வளப்போருக்கு திறமையான சந்தைப்படுத்துதல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் அவசியமாகும்.

கால்நடை வளர்ப்பில் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளும் பல்முனை அணுகுமுறைகள் பின்வரும் கொள்கை முயற்சிகள் மூலம் மேற்கொள்ளப்படும்:

1. **கால்நடைகள் மூலம் சிறந்த வாழ்க்கைக்கு முதலீடு செய்தல்**: சொத்து இல்லாத கிராமப்புற ஏழைப் பெண்களைக் கண்டறிந்து, அவர்களை வருமானம்

ஈட்டும் கால்நடை சொத்துக்களுக்கு உரிமையாளர்களாக்கி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்தல்.

2. **தீவனம் மற்றும் பசுந்தீவனம் வழங்கல்**: தீவனம் மற்றும் தீவன வளங்கள் லாபகரமான கால்நடை வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடை வளர்ப்பில் தீவனம் மற்றும் தீவன வளங்கள் சுமார் 65% பங்கை கொண்டுள்ளன. அதன் முக்கிய பங்கைக் கருத்தில் கொண்டு, தேவையான உள்ளீடுகள் மற்றும் மானியங்களை வழங்குவதன் மூலம் தீவன உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவித்தல்.

3. **வணிக மற்றும் புழக்கடை கோழி உற்பத்தி முறைகளின் விரிவாக்கம்**: இந்திய கோழி சந்தை 2021-2026 இல் CAGR இல் 15.2% வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மலிவான மற்றும் மானிய விலையில் உள்ளீடுகளை வழங்குவதால், புழக்கடை கோழி வளர்ப்பில் முழுமையான சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தல், புழக்கடை கோழி வளர்ப்பை

விரைவுபடுத்துவதோடு, வறுமை ஒழிப்பு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும் ஏதுவாகும். தீவனப் பொருட்களின் நிலையான வழங்குதல் (பின்னோக்கிய இணைப்பு) மற்றும் மதிப்புச் சங்கிலியின் மேம்பாடு (முன்னோக்கிய இணைப்பு) ஆகியவை, புதிய மற்றும் மீண்டும் தோன்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் வணிக கோழி உற்பத்திக்கு சாதகமாக இருக்கும்.

4. **கால்நடை சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும் முறையை மேம்படுத்துதல்**: கால்நடைகளின் உற்பத்தித் திறன், குறைவான செயல்திறன் பதிவைக் கொண்ட கால்நடை சுகாதார அமைப்பைப் பொறுத்துள்ளது. கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கை பெரிய அளவில் மாறியுள்ளதால், கால்நடை பராமரிப்பு சேவைகளின் தரம், நோய் கண்காணிப்பு, கட்டுப்பாடு, கண்டறிதல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவை வளர்ச்சியை தக்கவைப்பதற்கு ஒரு முக்கிய அங்கமாகத் தொடர்கின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை கலப்பினங்களை நோக்கி வளைந்துள்ளது. எனவே, கால்நடைகளின்

ஆரோக்கியம் மற்றும் நீடித்த ஆதரவு அமைப்புகளுக்கு புத்துயிர் அளித்து வளப்படுத்துகிறது மற்றும் பொது சேவை விநியோக அமைப்புகளை மிகவும் திறமையாகவும் பதிலளிக்கக்கூடியதாகவும் மாற்றுகிறது. இந்த சூழலில், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஒரு சுகாதார அணுகுமுறையில் முதலீடு செய்வதும் முக்கியம் ஆகும்.

5. **கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்**: கால்நடை பண்ணைகள், விந்து உற்பத்தி நிலையம், செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மற்றும் கால்நடை நிலையங்கள் போன்றவற்றின் உள்கட்டமைப்பு வசதிகள் கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடை பண்ணைகள் உள்நாட்டு இனங்களின் வளர்ச்சிக்கும் கலப்பின இனப்பெருக்கத் திட்டத்தை மேற்கொள்வதற்கும் முக்கியமானது ஆகும். இத்தகைய கால்நடை பண்ணைகள் சமுதாயத்திற்கு நல்ல தரமான கறவை

மாடுகள் அல்லது பிற கால்நடைகளை வழங்குவதை உறுதி செய்யும். உயர் மரபணு தகுதி கொண்ட காளைகள் மற்றும் தேவையான உள்கட்டமைப்புகளுடன் உறைவிந்து நிலையங்களை வலுப்படுத்துதல், கருமாற்றம், இன்விட்ரோ கருத்தரித்தல் போன்ற அதிநவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்றுதல் போன்றவை உறைவிந்து குச்சிகள் தேவை மற்றும் செயற்கை முறை திட்டத்தில் உள்ள சவால்களை நிவர்த்தி செய்யும்.

6. **நிலையான வளர்ச்சிக்காக மக்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் முதலீடு செய்தல்:** துறைக்குத் தேவையான முற்போக்கான மாற்றங்களை ஆதரிக்க திறமையான வல்லுநர்களை உருவாக்குதல்; அனுபவம் மற்றும் அறிவு சார்ந்த முதலீடு; விவசாயிகளுக்கு மேம்பட்ட சேவைகள் மற்றும் ஆதரவை வழங்குவதற்கான அறிவு இடைவெளியைக் குறைப்பதற்காக அதிக கூட்டாண்மை உட்பட ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துதல். நல் உற்பத்தி நடைமுறைகள் தரத்திற்கு இணக்கமான

தடுப்பூசி தயாரிப்பு ஆய்வகங்களை நிறுவுவதன் மூலம் ஆய்வக உள்கட்டமைப்பை உலகளாவிய தரத்திற்கு மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

7. **சூழலியல், சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகளைப் பராமரித்தல்:** உயிர்க்கோளத்தின் இயல்பான செயல்பாடு விலங்குகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகளின் முடிவில்லாத தொடர்புகளைச் சார்ந்துள்ளது. வனவிலங்குகள் நமது கலாச்சாரத்தில் வணக்கத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரிய ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளன. வன விலங்குகள், உயிர்வாழும் மற்றும் இனப்பெருக்கம் செய்யும் திறனை சவாலாக உள்ள வெளிப்புற அழுத்தங்கள் அல்லது அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து எதிர்கொள்கின்றன. மேலும், வனம் மற்றும் புல்வெளி பரப்பைக் குறைத்தல், விலங்குகள் மற்றும் மனித மக்கள்தொகையை விரிவுபடுத்துதல் மற்றும் நகரமயமாக்கல் மற்றும் குறைந்துவரும் வளங்கள் ஆகியவை முன்பு இல்லாத அளவுக்கு மற்றும் மனித-விலங்கு மோதல்களை

ஏற்படுத்துகின்றன. ஒரு ஒருங்கிணைப்பு மையத்தை நிறுவி கால்நடை மருத்துவர்களின் பயிற்சி மற்றும் திறனை மேம்படுத்துவதன் மூலம் மனித-விலங்கு மோதல்களை நிவர்த்தி செய்து மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

மேலே உள்ள கொள்கைச் சிந்தனைகளை ஆதரிப்பதற்காக, கால்நடை பராமரிப்புத் துறை பின்வரும் குறிப்பிட்ட செயல்பாடுகளை முன்வைக்கிறது:

1. நுண்ணூட்டச் சத்துக்களை (கனிமக் கலவை) கூடுதலாகச் சேர்ப்பதன் மூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் இனப்பெருக்க சுகாதார மேலாண்மையில் புதிய வழிமுறைகளைப் புகுத்துதல்.
2. உள்ளீடுகள் மூலம் தீவன உற்பத்தியை ஊக்குவித்தல்
3. insitu மற்றும் exsitu பாதுகாப்பு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கம் மூலம் உள்நாட்டு கால்நடைகள் மற்றும் கோழி இனங்களை பாதுகாத்தல்.

4. களப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் கால்நடைகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்களான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுதல்.
5. பொருத்தமான ICT கருவிகளின் உதவியுடன் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை மாற்றுதல்.
6. கால்நடைகளை காப்பீடு செய்வதன் மூலம் கால்நடைகளின் இழப்பினால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப்படும்.
7. கால்நடைகள் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1960 மற்றும் அதன் அனைத்து திருத்தங்களின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தன் பிரிவு 51(A)(g)ன் கீழ் வழங்கப்பட்டவாறு கால்நடைகளின் நலன் பாதுகாக்கப்படும்.
8. நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளின்படி நோய் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் செயல்படுத்தப்படும்.

9. பொது - தனியார் கூட்டாண்மை மூலம் கால்நடைத் துறையில் முதலீடுகளை மேம்படுத்துதல்
10. ஆட்டினங்களின் உற்பத்திக்காக உழவர் உற்பத்தியாளர்களின் அமைப்பை (FPO) உருவாக்குதல்.
11. கிராமப்புறங்களில் இறைச்சி மதிப்புச் சங்கிலிகளை நிறுவுதல், இதில் கிராமப்புற இறைச்சிக் கூடங்களை நிறுவுதல், இறைச்சியைச் சேமிப்பதற்கான குளிர்பதனக் கிடங்குகள் நிறுவுதல், இறைச்சியை செலவு குறைந்த குளிரூட்டும் வாகனங்கள் மூலம் எடுத்து செல்லுதல் ஆகியவை அடங்கும்.
12. மனித - வன விலங்கு பிரச்சனைகளைத் தவிர்க்க முனைப்பு மையத்தை நிறுவுதல்.
13. பங்குதாரர்களுக்கான திறன் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டு திட்டங்களை வழங்குதல்.
14. புதிய கால்நடை மருத்துவ நிலையங்களை உருவாக்குதல் மற்றும் இருப்பில் உள்ள கால்நடை நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் நடமாடும் கால்நடை மருத்துவ சேவையை வலுப்படுத்துதல்.

## 20. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் தரமான மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 1989இல் கால்நடைகள் மற்றும் பொது நலன் காப்பாளரும், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் கால்நடைகளுக்கு மேம்பட்ட மருத்துவப் பாதுகாப்பை அளிக்கவும் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும் ஆசியாவின் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை கீழ்க்காணும் நோக்கங்களுடன் நிறுவினார்.

- பல்கலைக்கழகம் நிர்ணயத்தவாறு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் கல்வியினை அளித்தல்

- கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் நவீன கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயல்பாட்டினை மேம்படுத்துதல்
- பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிச் செயல்பாட்டின் முடிவுகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களுக்கு விரிவுபடுத்தும் பணியினை மேற்கொள்ளுதல்

இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவச் சிகிச்சையில் முன்னோடிப் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து வருகிறது. மேலும், நாட்டின் கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் முதன்மையானதாகத் தொடர்கிறது :

**20.1.1 பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்**

| வ. எண். | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | 120 |
| 2. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | 80 |

| வ. எண். | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 3. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு | 80 |
| 4. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி | 80 |
| 5. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் | 40 |
| 6. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி | 40 |
| 7. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் | 40 |
| 8. | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி, திருவள்ளூர் | 60 |

| வ. எண். | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 9. | கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஓசூர் | 40 |
| | **மொத்தம்** | **580** |

### 20.1.2 பல்கலைக்கழகத்தின் புறநகர் ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வகங்கள் மற்றும் மையங்கள்

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | • கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம்<br>• கால்நடைப் பண்ணை வளாகம், மாதவரம்<br>• பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம்<br>• நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம்<br>• நுண்ணுயிரித் தடுப்பூசி |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | ஆராய்ச்சி மையம், மாதவரம்<br>• விலங்குவழி பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம், மாதவரம்<br>• ஆய்வக விலங்கினப் பிரிவு, மாதவரம்<br>• கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம், மாதவரம்<br>• கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளம், மாதவரம்<br>• உயிர்ப் பாதுகாப்பு நிலை III ஆய்வகம், மாதவரம்<br>• மைய சிகிச்சையியல் ஆய்வகம், வேப்பேரி |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | • முதன்மைச் செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருந்தக மையம், வேப்பேரி |
| 2. | செங்கல்பட்டு | • கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம><br>• கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம்<br>• மத்திய தீவன தொழில்நுட்ப மையம், காட்டுப்பாக்கம்<br>• வேளாண் அறிவியல் மையம், காட்டுப்பாக்கம்<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், மேல்மருவத்தூர் |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 3. | காஞ்சிபுரம் | • உழவர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் |
| 4. | தருமபுரி | • ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம்<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 5. | விழுப்புரம் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்<br>• உழவர் பயிற்சி மையம் |
| 6. | சேலம் | • மேச்சேரி செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி<br>• பறவையின நோயாய்வுக் கூடம், தலைவாசல்<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |


| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 7. | ஈரோடு | • பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், பர்கூர்<br>• காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோடு<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 8. | நீலகிரி | • செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாந்திநல்லா |
| 9. | நாமக்கல் | • கோழியின நோயறி மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகம்<br>• கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடம்<br>• கோழிகளுக்கான பாரம்பரிய கால்நடை |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | மருத்துவ மூலிகை ஆராய்ச்சி மையம்<br>• வேளாண் அறிவியல் மையம் |
| 10. | சிவகங்கை | • புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை<br>• வேளாண் அறிவியல் மையம், குன்றக்குடி |
| 11. | புதுக்கோட்டை | • மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் |
| 12. | மதுரை | • கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையம் |
| 13. | தேனி | • உழவர் பயிற்சி மையம் |
| 14. | திருவாரூர் | |
| 15. | இராமநாதபுரம் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் |
| 16. | கன்னியாகுமரி (நாகர்கோவில்) | |
| 17. | வேலூர் | |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 18. | திருவண்ணாமலை | |
| 20. | கிருஷ்ணகிரி | |
| 20. | கடலூர் | |
| 21. | பெரம்பலூர் | |
| 22. | திருப்பூர் | |
| 23. | கோயம்புத்தூர் | |
| 24. | கரூர் | |
| 25. | தஞ்சாவூர் | |
| 26. | நாகப்பட்டினம் | |
| 27. | திண்டுக்கல் | |
| 28. | திருச்சிராப்பள்ளி | |
| 29. | விருதுநகர் (இராஜபாளையம்) | |

### 20.1.3 நிர்வாகக் கட்டமைப்பு

**பல்கலைக்கழகத்தின் செயலமைப்பு**



### 20.2 கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்ட / பட்டய வகுப்புகள் மற்றும் அதன் மாணவர் சேர்க்கை விவரங்கள் பின்வருமாறு :

| பட்ட / பட்டய வகுப்புகள் | **மாணவர் சேர்க்கை எண்ணிக்கை** |
|---|---|
| கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் விலங்கினப் பராமரிப்பில் இளநிலைப் பட்டம் | 480 |
| உணவுத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 40 |
| கோழியினத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 40 |
| பால்வளத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 20 |
| கால்நடை மருத்துவ அறிவியலில் முதுநிலை பட்டம் | 166 |
| எம்.டெக் (உணவு தொழில்நுட்பம்) | 10 |
| எம்.டெக் (கோழியின தொழில்நுட்பம்) | 3 |
| எம்.டெக் (பால்வள தொழில்நுட்பம்) | 3 |

| பட்ட / பட்டய வகுப்புகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|
| எம்.டெக் (பால்வள வேதியியல்) | 3 |
| எம்ஃபில் பட்டம் (உயிர்த் தொழில் நுட்பவியல்) | 8 |
| எம்.எஸ்சி., (உயிர்த் தகவல் நுட்பவியல்) | 10 |
| எம்.எஸ்சி., (உயிர் புள்ளியியல்) | 3 |
| எம்.எஸ்சி., (உயிர்த் தொழில் நுட்பவியல்) | 10 |
| பி.எச்.டி., (கால்நடைப் புலம்)<br>(கால்நடை பராமரிப்புத் துறையினர்- 5 தவிர) | 100 |
| பி.எச்டி., (உயிர்த் தொழில் நுட்பவியல்) | 5 |
| பி.எச்.டி., (உணவு தொழில்நுட்பம்) | 5 |
| முதுநிலைப் பட்டயம் | 42 |
| முதுநிலைப் பட்டயம் (தொலைநிலைக் கல்வி வழி) | 170 |
| எம்.பி.ஏ. (உணவு மற்றும் கால்நடை வணிக மேலாண்மை) | 10 |

## 20.3 2021ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சாதனைகள்

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரவரிசைப் பட்டியல் 2020-இன்படி இந்தியாவில் மாநில அளவிலான கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், அனைத்து வேளாண் பல்கலைக் கழகங்களுக்கிடையில் 12ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. இதனை மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை டிசம்பர் 2021இல் வெளியிட்டது
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளத்தின் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்தி, துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பின் உறுப்பினரான இல்லும் ஜீன் எனும் துவக்க நிலை நிறுவனத்தின் மூலம், கள அளவில் நாய்களைத் தாக்கும் இரத்த ஓரணு

ஒட்டுண்ணிகளைக் கண்டறியும் சேவையைத் துவக்கியுள்ளது.

- 2021 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கிய நான்கு தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன
- கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்படும் நோக்குடன் நான்கு கல்வி நிறுவனங்களுடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட 'செயலிழக்கம் செய்யப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி', வீரியம் அழிக்கப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி' மற்றும் 'செயலிழக்கம் செய்யப்பட்ட பன்றி சிர்கோ நச்சுயிரி-2 தடுப்பூசி' ஆகிய மூன்று நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களை தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென 07.06.2021அன்று கர்நாடகாவில்

உள்ள பயோவெட் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

**20.4 ஆராய்ச்சி**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்புத் துறை எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்கு ஏற்ப நவீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வலுவான ஆராய்ச்சி கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், 12 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 ஆராய்ச்சி ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்டு கால்நடை நலம், கால்நடை உற்பத்தி, கால்நடை மருத்துவ உயிரியல், விலங்குவழி நோய்கள், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு, நோயறிதல் மற்றும் கண்காணித்தல், பாரம்பரிய கால்நடை மருத்துவம், கால்நடை மருந்துக் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 2021ஆம் ஆண்டில், பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு நிதி முகமைகளின் மூலம் ரூபாய் 2,327.64

இலட்சம் மதிப்பீட்டில் 28 ஆராய்ச்சித் திட்டங்களை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

### 20.4.1 திட்டங்களின் செயல்பாடுகள்

ஒன்றிய அரசு நாட்டினக் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு ஊக்கமளித்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தின் நாட்டினக் கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, “தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறியாட்டின மையம் நிறுவுதல்”, “கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் நிறுவுதல்" மற்றும் “சிறுவிடை கோழியின வள மையம் மாதவரத்தில் நிறுவுதல்" ஆகிய மூன்று திட்டங்களை ரூ.527.94 இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்திட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் திட்டப்பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தின் தென் மண்டலப் பகுதிகளில் விலங்குவழிப் பரவும் நோயறிதல் மற்றும் நோய் மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்குடன் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் "விலங்குவழி பரவும் நோய் ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம்" ரூ.160.65 இலட்ச மதிப்பீட்டில் அமைக்க தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உயர்ரக தீவன விதைகள் மற்றும் கரணைகளை உற்பத்தி செய்து கால்நடை விவசாயிகளுக்கு வழங்கிட, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் "தமிழகத்தின் வடமேற்கு மண்டலப் பகுதியில் நிலையான கால்நடை உற்பத்திக்கென தீவன விதை உற்பத்திப் பிரிவு" ரூ.149.20 இலட்ச மதிப்பீட்டில் நிறுவிட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் குறைந்த விலையில் தரமான பண்ணை உபகரணங்களை கால்நடை விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கிட, "பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையம் மேம்படுத்துதல்" எனும் திட்டத்தினை ரூ.250 இலட்சம் செலவில் செயல்படுத்திட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு உரிய பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நிதி உதவியுடன், கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் துறை மூலம் இலவச கறவை மாடு திட்டப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கென ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தில் "கன்று நலச் சாதனப் பெட்டி" 12,000 எண்ணிக்கையில் உற்பத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### 20.5 தொழில்நுட்பங்கள்

கால்நடை மற்றும் கோழியின - நலம், உற்பத்தி, மதிப்பூட்டிய இறைச்சி மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி ஆகியவை சார்ந்த தொழில்நுட்பங்களை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. வர்த்தக மயமாக்கத்திற்குத் தயாராக உள்ள இப்பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களாவன: ஆக்டிவ் ஹீல். ஐவர்மெக்டின் சார்ந்த "ஸ்பாட் ஆன்" எனும் ஒட்டுண்ணித் தடுப்பான், நானோ மெதிகோன் குழைவு, மெட்டிரோ சிங்க் குழைவு மற்றும் நாய்களில் வாய்ப்பகுதியை சீர்படுத்தும் குழைவு, புளி விதையின் துகள்களைப் பயன்படுத்தி நார்ச்சத்து நிறைந்த பால் பொருட்களான பால் லாலிகள், யோகர்ட் மற்றும் மொஸரெல்லா சீஸ் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள், நெய், மைசூர்பாகு, சுவையான ஊநீர் பானம், சென்னா பேடா, இறைச்சியினாலான பேட்டீஸ், நக்கட்ஸ் மற்றும் சமோசா ஆகியவற்றின் தயாரிப்புத் தொழில்நுட்பங்கள் மெருகேற்றப்பட்டுள்ளன.

'செயலிழக்கம் செய்யப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி', வீரியம் அழிக்கப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி' மற்றும் 'செயலிழக்கம் செய்யப்பட்ட பன்றி சிர்கோ நச்சுயிரி-2 தடுப்பூசி' ஆகிய மூன்று நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களை பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கியுள்ளனர்.

### 20.5.1 கொரோனா பெருந்தொற்று மீட்பிற்கான முயற்சிகள்

- கொரோனா பெருந்தொற்றுக் காலக்கட்டத்தில், மொத்தம் 189.5 மெட்ரிக் டன் கால்நடை மற்றும் கோழித் தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் பல்கலைக்கழகத்தின் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.
- தமிழக அரசின் சுகாதாரத் துறையுடன் இணைந்து, கொரோனா பெருந்தொற்றிற்கான 35 சிறப்புத் தடுப்பூசி முகாம்களை இப்பல்கலைக்கழகம் அதன் உறுப்புக் கல்லூரிகளில் நடத்தியதன் வாயிலாக 2330 கொரோனா தடுப்பூசி கள் செலுத்தப்பட்டது.

- திருச்சிராப்பள்ளி, ஐசிஐசிஐ அறக்கட்டளையுடன் பல்கலைக்கழகம் இணைந்து, விவசாயிகளின் நன்மைக்காக "கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் சுகாதார மேலாண்மை, கால்நடைகளில் நோய்களைக் கண்டறிதல் மற்றும் கால்நடைகளுக்கு முதன்மைச் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குதல்" எனும் தலைப்பில் இணையவழியில் சிறப்பு விரிவுரையை 21.05.2021 அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தியதில் தஞ்சாவூரில் சுற்றியுள்ள 76 விவசாயிகள் பயனடைந்தனர்.
- "கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் கால்நடை நலன் கண்காணிப்பு மற்றும் கால்நடை உற்பத்தித் திறனை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் மாநில அளவில் விவசாயிகளுக்கான இணையவழிக் கருத்தரங்கு மற்றும் குழு விவாதம் 01.07.2021, 02.07.2021 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டதில் 747 விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

## 20.6 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியல் புலங்களில் ஏற்படும் அண்மைக்கால முன்னேற்றங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு இப்பல்கலைக்கழகம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

### 20.6.1 மாணவர்களுக்கான முயற்சிகள்

- பல்கலைக்கழகம் "தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் உலகளாவிய பெரிய பிராணிகள் மருத்துவ அறிவியல் இணையக் கருத்தரங்குத் தொடர் II - 2021"-ஐ 07.01.2021 மற்றும் 08.01.2021ஆம் தேதிகளில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தியதன் வாயிலாக மொத்தம் 3,344 கால்நடை மருத்துவம் பயிலும் இளநிலைப் பட்ட மாணவர்கள், முதுநிலைப் பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பயனடைந்தனர்.

- கால்நடை மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் தற்காப்பின் அவசியம் குறித்த தேசிய இணையவழி நிகழ்ச்சி 28.01.2021 மற்றும் 29.01.2021ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 1,028 மாணவர்கள் பயனுற்றனர்.
- "தரமான ஆய்விற்கு கேப் அப்ஸ்ட்ராக்ட்களின் சிறந்த பயன்பாடு" குறித்த இணையவழிப் பயிற்சி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 23.06.2021அன்று நடத்தப்பட்டதில் மொத்தம் 210 ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்காக, பல்கலைக்கழகம் "ஸ்கோபஸ் பகுப்பாய்வுடன் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்" என்ற இணையப் பயிற்சியினை 30.07.2021அன்று நடத்தியதில் 120 நபர்கள் பங்கேற்றுப் பயனுற்றனர்.

- பல்கலைக்கழகத்தில் இளநிலை / முதுநிலைப் பட்ட மாணவர்கள் பயனுறும் வண்ணம் "பல்கலைக்கழகக் கால்நடை மருத்துவத் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் மாணவர்களுக்கான தொழில்முனைதல் வாய்ப்புகள்" குறித்த பயிலரங்கு ஒரத்தநாடு, திருநெல்வேலி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் முறையே 16.11.2021, 17.11.2021 மற்றும் 18.11.2021ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது.

### 20.6.2 ஆசிரியர்களுக்கான முயற்சிகள்

- கேரளா கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்துடன் இணைந்து இப்பல்கலைக் கழகம் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களின் நலனுக்காக "உறுதிபூணும் மரபணு மற்றும் மரபணுத் தொழில்நுட்பங்கள் - கால்நடைத் தெரிவு மற்றும் மேம்பாடு" எனும் உலகளாவிய இணைய மாநாட்டை 27.01.2021 மற்றும் 28.01.2021ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தியதில் 362 நபர்கள் பயனடைந்தனர்.

- "கால்நடைக் கழிவு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" குறித்த உலகளாவிய இணைய நிகழ்ச்சி 12.01.2021 அன்று திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் 200 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- "நாய்களில் இனப்பெருக்க மீயொலி மற்றும் பிறப்புறுப்பு வழி குட்டிகள் ஈனுதலைக் கையாளுதல்" குறித்த உலகளாவிய கால்நடை இனப்பெருக்கம் குறித்த இணைய நிகழ்ச்சி 11.03.2021 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டதில் மொத்தம் 805 நபர்கள் பங்கேற்றனர்.
- "விலங்குகளில் ஒட்டுண்ணி நோய் கண்டறிதல்" குறித்த உலகளாவிய இணையக் கருத்தரங்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூ 23.04.2021 அன்று நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில்

இந்தியா மற்றும் அயல்நாடுகளைச் சார்ந்த கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், களப்பணிக் கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என மொத்தம் 192 நபர்கள் பயனுற்றனர்.

- "நிலையான கால்நடை வளர்ச்சிக்குப் புதுமையான விரிவாக்க உத்திகள்" எனும் இணையக் கருத்தரங்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 29.04.2021 அன்று நடத்தப்பட்டதில் மொத்தம் 498 நபர்கள் பயனுற்றனர்.
- கால்நடை வளர்ச்சிக்கான கால்நடை மருத்துவத் தொடர் கல்வித் திட்டத்தின் கீழ் காமன்வெல்த் கற்றல் அமைப்பு, கனடா மற்றும் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், கான்பூர் ஆகியவற்றுடன் இணைந்து இப்பல்கலைக்கழகம் "கறவை மாடுகளில் மலட்டுத்தன்மை மேலாண்மை" குறித்த பன்னாட்டுப் பயிலரங்கைக் காணொலிக் காட்சி மூலம் 07.05.2021 அன்று நடத்தியது.

- "உணவுப் பாதுகாப்பு மற்றும் நீடித்த உணவிற்கான கூட்டிணைவை அடைவதற்கான வழிமுறைகளைச் செயற்படுத்துதல், அவற்றின் முன்னேற்றம் மற்றும் சவால்கள்" எனும் தலைப்பில் நாடளாவிய இணையக் கருத்தரங்கு 29.07.2021, 30.07.2021 ஆகிய தேதிகளில் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 604 நபர்கள் பயனுற்றனர்.
- "நாய்கள் மற்றும் பூனைகளில் இதயம் மற்றும் நுரையீரல் ஆகியவற்றின் அவசர மருத்துவ நிலைகளில் பராமரிப்பு மற்றும் சிகிச்சைகள்" குறித்த இணைய நிகழ்ச்சி 18.08.2021அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இதில் உலகம் முழுவதிலும் இருந்து 1,119 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றுப் பயனுற்றனர்.
- 07.10.2021 மற்றும் 08.10.2021ஆம் தேதிகளில் சென்னை, நச்சுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி மையத்தில் "விலங்குவழிப்

பரவும் நச்சுயிரி நோய்கள்" குறித்த செயல்முறைப் பயிற்சி கால்நடை மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டது.

- பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமனம் பெற்ற 45 உதவிப் பேராசிரியர்களுக்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் "புத்தாக்கம் மற்றும் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி" 25.10.2021 முதல் 29.10.2021 வரை அளிக்கப்பட்டது.
- "நிலையான மற்றும் உறுதியான உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் அமைப்புகளை உருவாக்குதல்" எனும் ஐந்து நாள் ஆசிரியர் மேம்பாட்டு இணையவழிப் பயிற்சி 25.10.2021 முதல் 29.10.2021 வரை கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 148 நபர்கள் பங்கேற்றனர்.

**20.7 சிகிச்சையியல் பணிகள்**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சிறந்த பயிற்றுவிப்பு கால்நடை மருத்துவமனை வசதிகளைக் கொண்டு கால்நடை மற்றும்

செல்லப் பிராணிகளுக்கு சிசிச்சை அளித்து வருகின்றது. 2021ஆம் ஆண்டில் மொத்தம் 2,35,039 கால்நடைகளுக்குப் புறநோயாளிகள் பிரிவின் மூலமும், 4,946 கால்நடைகளுக்கு உள்-நோயாளிகள் பிரிவின் மூலமும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மீயொலிக் கருவி (Ultrasonography), உள்நோக்குக் கருவி (Endoscope), இதய துடிப்பலைப் பதிவுக் கருவி (Electrocardiography), எலும்பு முறிவுச் சிகிச்சை (Orthopaedics), இரத்தச் சுத்திகரிப்புக் கருவி (Haemodialysis), கண் மருத்துவம் (Ophthalmology), தோல் நோயியல் (Dermatology), நாய்களுக்கான இரத்த வங்கி ஆகிய உயர்தர மருத்துவ வசதிகளை இப்பல்கலைக்கழகத்தின் மருத்துவமனைகள் பெற்றுள்ளன. சென்னை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிடி ஸ்கேன் வசதிகளும் உள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கு 02.07.2021அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் "மோப்ப நாய்கள் பராமரிப்பு" குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

### 20.8 விரிவாக்கப் பணிகள்

விவசாயிகள், கிராமப்புற மகளிர் மற்றும் இளைஞர்கள், பள்ளி இடைநின்றோர், சுய உதவிக்குழுவினர் ஆகியோரது வாழ்வாதாரத்தைக் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பின் மூலம் மேம்படுத்தும் நோக்கில், கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, கால்நடைத் தீவனம் மற்றும் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி உள்ளிட்ட தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், பண்ணைப் பரிசோதனைத் திட்டங்கள், முதல்நிலைச் செயல் விளக்கத் திட்டங்கள் ஆகிய விரிவாக்கப் பணிகள் இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகக் கால்நடை மற்றும் கோழியினத் தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்தும் பணியினையும் இப்பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

2021ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு விரிவாக்க மையங்கள் வாயிலாக மொத்தம் 42,312

கால்நடை விவசாயிகளுக்கு 1,105 பயிற்சிகளும், 49,799 எண்ணிக்கையில் ஆலோசனைச் சேவைகளும் அளிக்கப்பட்டன. இவை தவிர கால்நடை விவசாயிகளுக்கு பண்ணை இடுபொருட்களும் வழங்கப்பட்டன. இக்குறிப்பாண்டில் விரிவாக்கப் பணி சார்ந்து நடத்தப்பட்ட இணையவழிக் கருத்தரங்குகள் பின்வருமாறு:

- கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் கால்நடை வளர்ப்போருக்கு செம்மறியாடு வளர்ப்பு பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி 30.07.2021அன்று அளிக்கப்பட்டது.
- 27.07.2021, 30.07.2021 ஆம் தேதிகளில் பட்டியலின வகுப்பைச் சார்ந்த 40 கால்நடை விவசாயிகளுக்கு ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மரபுசார் கால்நடை மருத்துவப் பயிலரங்கு நடத்தப்பட்டது.
- 27.07.2021அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் "கழுதை

வளர்ப்போருக்கான கருத்தரங்கு" நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- இந்தியாவின் 75ஆவது ஆண்டு சுதந்திர தினத்தினை முன்னிட்டு 26.08.2021அன்று "சுதந்திரத்தின் அமுதப் பெருவிழா" கொண்டாட்டத்தை ஒட்டி நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் "விவசாயிகளுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து" குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் நடைபெற்ற கண்காட்சியில் சிறுதானியங்கள், பால், இறைச்சி, மீன் ஆகியவற்றின் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்புக் கூட்டிய ஊட்டச்சத்து பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பப்பட்டதில் 213 விவசாயிகள் பயன்பெற்றனர். .
- தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி ஆணைய நிதியுதவியுடன் "தமிழ் நாட்டின் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள்" குறித்து

பயிற்சி 17.08.2021 மற்றும் 18.08.2021ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் 64 **கால்நடை விவசாயிகள்** பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- இந்திய வேளாண் திறன் மேம்பாட்டுக் கழக நிதியுதவியுடன் நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் "கரிம விவசாய முறை" குறித்து திறன் மேம்பாட்டுப் பயிற்சி 25 நாட்களுக்கு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.
- "கால்நடைகளின் நலம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தத் தொழில்நுட்பங்கள்" குறித்து விவசாயிகள் கருத்தரங்கு 23.08.2021அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் பட்டியலின வகுப்பைச் சார்ந்த 100 **கால்நடை விவசாயிகள்** பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் "தமிழ் நாட்டில் முயல்

வளர்ப்பின் நிலை, சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" குறித்த மாநில அளவிலான பண்ணையாளர் கருத்தரங்கு 29.10.2021அன்று நடத்தப்பட்டதில் 62 கால்நடை விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### 20.8.1 தொலைநிலைக் கல்வி வகுப்புகள்

கால்நடை மருத்துவ அறிவியலில் உள்ள நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு 17 பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் கால்நடை மருத்துவர்களுக்குத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிரக் கால்நடை மற்றும் கோழியின உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற வருவாயைப் பெருக்கும் பொருட்டு 15 தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 11 தலைப்புகளில் சுய வேலை வாய்ப்பு பயிற்சிகளும் கால்நடை வளர்ப்போர் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. 2021ஆம் ஆண்டில், தொலைநிலைக் கல்வி வாயிலாக நடத்தப்பட்ட வகுப்புகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பாடத்தலைப்பு |
|---|---|
| I | **கால்நடை மருத்துவர்களுக்கான பட்டய படிப்பு** |
| 1. | புத்தாக்க மருத்துவம் |
| 2. | சிறு விலங்கின அல்ட்ராசவுண்ட் நோயறி முறைகள் |
| 3. | மாட்டினங்களில் கருத்தங்காமையும் அதன் மேலாண்மை முறைகளும் |
| 4. | வனவிலங்கு நோய் மேலாண்மை |
| 5. | கால்நடை சிகிச்சையியல் ஆய்வக நோயறிதல் |
| 6. | கால்நடை நல பொருளியல் |
| 7. | கால்நடை மருத்துவ எண்டாஸ்கோபி |
| 8. | பாரம்பரிய கால்நடை மருத்துவ முறைகள் |
| 9. | விலங்கு மாதிரிகளைக் கொண்டு நவீன இனவிருத்தி உயிர்த் தொழில்நுட்பம் |
| 10. | இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் தரநிர்ணயம் |
| 11. | பால்பதப்படுத்துதல் மற்றும் தரநிர்ணயம் |
| 12. | தீவன உற்பத்தி தொழில்நுட்பம் |

| வ.எண் | பாடத்தலைப்பு |
|---|---|
| 13. | வர்த்தக ரீதியில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை |
| **II** | **திறன் மேம்பாட்டுப் பயிற்சி** |
| 1. | தீவன ஆலைக் கண்காணிப்பாளர் |
| 2. | கால்நடைப் பண்ணை மேலாளர் |
| 3. | கோழிப் பண்ணை மேலாளர் |
| 4. | குஞ்சுப் பொரிப்பகக் கண்காணிப்பாளர் |
| **III** | **சுய வேலைவாய்ப்புப் பயிற்சி** |
| 1. | கறவை மாட்டுப் பண்ணையம் |
| 2. | செம்மறியாட்டுப் பண்ணையம் |
| 3. | வெள்ளாட்டுப் பண்ணையம் |
| 4. | தீவனம் மற்றும் தீவன விதை உற்பத்தி |
| 5. | மதிப்புக் கூட்டிய பால் பொருட்கள் உற்பத்தி |
| 6. | முயல் பண்ணையம் |
| 7. | பன்றிப் பண்ணையம் |
| 8. | ஜப்பானியக் காடைப் பண்ணையம் |
| 9. | நாட்டினக் கோழி வளர்ப்பு |

## 20.9 விருதுகள் / அங்கீகாரங்கள்

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் மேம்படுத்தப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள நான்கு தொழில்நுட்பங்களுக்கு 2021ஆம் ஆண்டில் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது:

1. கோழித் தோல் கொழுப்பிலிருந்து பெறப்பட்ட எண்ணெயில் இருந்து உயிரி டீசல் உற்பத்தி
2. பறவையினங்களைத் தாக்கும் புற்றுநோய் நச்சுயிரிகளைக் கண்டறிய பன்முனை பிசிஆர் பிரைமர்கள்
3. ஆந்த்ராக்ஸ் நச்சுயிரித் தடுப்பூசியின் ஊநீர்ப் பகுப்பாய்வு செய்வதற்கான அகார் ஜெல் இம்யூனோடிப்யூசன் சோதனை சாதனம்
4. மான்டனைட் சேர்க்கப்பட்ட ஆந்த்ராக்ஸ் தடுப்பூசி தயாரிக்கும் தொழில்நுட்பம்

## 20.10 நிலையான வளர்ச்சி இலக்குகள் - தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) கட்டமைப்பானது சமூக ஒருங்கிணைப்பு, பொருளாதார செழுமை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பு ஆகியன நிலையான வளர்ச்சியடைய இன்றியமையாதவை ஆகும். இவ்விலக்குகளை அடைவதற்கு இப்பல்கலைக் கழகம் முக்கிய பங்களிப்பினை வழங்கிவருகின்றது. பண்ணையம் சார்ந்த அனைத்து கள செயல்முறைகளிலும், இப்பல்கலைக்கழகம் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கு வகுக்கின்றது. பல்கலைக்கழகத்திற்கு உரித்தான இலக்குகளாவன: இலக்கு 1: வறுமையின்மை; இலக்கு 2: பசியின்மை; இலக்கு 4: தரமான கல்வி; இலக்கு 5: பாலின சமத்துவம்; இலக்கு 12: நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி. இவற்றினை நோக்கிய பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பின்வருமாறு:

20.10.1 இலக்கு 1: வறுமையின்மை

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

- "அனைத்து நிலைகளிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவரும்" இலக்கை அடைய, பல்கலைக்கழகம் விவசாய சமூகத்தினை அறிவியல் ரீதியாக கால்நடை வளர்ப் சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தி அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தி பின்னடைவுகளை தவிர்க்க ஊக்குவித்து வருகிறது.
- இப்பல்கலைக்கழகம் மூலம் 2021-22ஆம் ஆண்டில் கோழி வளர்ப்போர் தரமான கோழிகளை உற்பத்தி செய்திட, 51,578 எண்ணிக்கையில் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள், 15.567 வளர் கோழிகள், 1,64,862 ஒரு நாள் காடைக் குஞ்சுகள், 9,327 வளர்ந்த காடைகள் மற்றும் 64,159 குஞ்சு பொரிக்கும் முட்டைகளும் வழங்கப்பட்டன.
- கால்நடை உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகளான கால்நடை பராமரிப்பு செலவுகளை குறைத்தல்; சினையுறுதலை

அதிகரித்தல்; கால்நடை மதிப்புகூட்டிய பொருட்கள் தயாரிப்பு தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் புதிய சந்தைகளை அணுகுதல் ஆகியன மறைமுகமாக வறுமையை ஒழிக்க உதவும். இவ்விலக்கினைப் பூர்த்தி செய்ய பல்கலைக்கழகம் உரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

**இலக்கு 2: பசியின்மை**

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

- இந்த இலக்கு "பசியினை போக்குதல், உணவுப் பாதுகாப்பு, மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்" ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. புரதம் மற்றும் பிற ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவை வழங்குவதன் மூலம் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதில் கால்நடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்கள் தொகை அதிகரிப்பு, தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட நில

வளங்களின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கக்கூடும் என்பதால், பெருகி வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கால்நடை வளர்ப்பு தவிர்க்க முடியாதவையாகின்றன. பசியினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விவசாய மேம்பாடு மற்றும் அதனைச் சார்ந்த கால்நடை வளர்ப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பல்கலைக்கழகம் கால்நடை வளர்ப்பை அதன் கல்வி, ஆராய்ச்சி மற்று விரிவாக்க நடவடிக்கைகளின் மூலம் ஊக்குவிக்கி றது. பல்கலைக்கழகத்தின் செயல்களான கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், நீக்குதல் மற்றும் ஒழித்தல் ஆகியவை முட்டை, பால் மற்றும் இறைச்சியின் உற்பத்தி மற்றும் உற்பத்தி அளவை மேம்படுத்துவதன் மூலம் கால்நடைகளின் ஆரோக்கியத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிக்கின்றன. கால்நடைகளில் நுண்ணுயிர்

எதிர்ப்பிகளை போதிய அளவில் பயன்படுத்துதல், நுகர்வோரின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், நிலையான விவசாயத்திற்கும் உதவுகிறது. இதன் விளைவாக, பல்கலைக்கழகம் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் அளவான பயன்பாட்டை ஆதரிப்பதுடன் பாரம்பரிய மூலிகை மருத்துவ முறைகளை மாற்றாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்கிறது. இதன்மூலம் கரிம வேளாண்மையினை ஊக்குவிக்க இயலும். நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடத்தில் பாதுகாத்தல் மூலம் அதன் நிலைப்புத் தன்மை நீடிக்க வாய்ப்புள்ளதால், அரசாங்கத்தின் ஒருங்கிணைப்புடன் பல்கலைக்கழகம் நாட்டு இனங்களைப் பாதுகாப்பதற்கான மையங்களை நிறுவியுள்ளது. இதன் பொருட்டு 2021-22 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம் நாட்டின கால்நடைகளைப் பாதுகாப்பதற்காகவும், நிலையான

கால்நடை உற்பத்திக்காகவும் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தத் துவங்கியுள்ளது.

- தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கறுப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்
- தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நிறுவுதல்
- தமிழ்நாட்டின சிறுவிடை கோழியின வள மையம் மாதவரம் பால்பண்ணையில் நிறுவுதல்
- கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவு நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்

**இலக்கு 4: தரமான கல்வி**

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

"தரமான சம கல்வி அளிப்பதனை உறுதிசெய்தலை உள்ளடக்கி அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்" என்ற கொள்கையில்,

இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவம் மற்றும் உணவு அறிவியல் துறைகளில் அறிவுத்திறன் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கி வருகின்றது. வழக்கமான வளாகக் கல்வியுடன் இப்பல்கலைக்கழகம், புறநிலைய பயிற்சித் திட்டங்கள் வாயிலாக கிராமப்புற மக்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியினைப் பெற ஊக்குவிக்கிறது. பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவத்தில் பல்வேறு பட்டப்படிப்புகள் மற்றும் பட்டய படிப்புகளை வழங்கி வருகின்றது, இவற்றிற்கான மாணவர் சேர்க்கையானது அரசாங்கத்தின் விதிமுறைகளை பின்பற்றி நடைபெறுகிறது. இப்பல்கலைக்கழகம் கள நிலை கால்நடை மருத்துவர்களது மருத்துவத் திறனை மேம்படுத்தும் வகையில் தொடர்கல்வித் திட்டத்தினையும் செயல்படுத்தி வருகின்றது. இப்பல்கலைக்கழகம் அதன் மாணவர்கள், விவசாய சமூகம் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு தரமான கல்வியை அளிக்கும் வகையில், பின்வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

- கற்கும் போதே வருவாய் ஈட்டல் – மாணவர்களுக்கான செயல்முறைக் கல்வி
- தொழில்முனைவு நடவடிக்கைகள் சார்ந்த 15 திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் 10 சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள்

**இலக்கு 5: பாலின சமத்துவம்**

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

இந்த இலக்கு "பாலின சமத்துவத்தை அடைவதையும், அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் திறனை மேம்படுத்துதலையும்" நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு பாலின சமத்துவம் முக்கியமானதாக விளங்கவதுடன் ஒட்டுமொத்த சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது. இப்பல்கலைக்கழகம் அதன் நிர்வாகம், கற்பித்தல் மற்றும் கற்றல், சமூக ஈடுபாடு, தொழிலகங்களின் பங்களிப்பு மற்றும் ஆராய்ச்சி மூலம் இந்த இலக்கை நோக்கிச் செயல்பட உறுதிபூண்டுள்ளது. மேலும், கால்நடை வளர்ப்புத் துறையில் பெண்களின் பங்களிப்பினைப் புரிந்துகொண்டு,

இப்பல்கலைக்கழகம் பல திட்டங்களை மாநிலம் முழுவதும் பரவியுள்ள அதன் விரிவாக்க மையங்களின் வாயிலாக பெண்களின் முன்னேற்றத்திகான முன்முயற்சிகளை மேற்கொள்கிறது.

- 2021-22ஆம் ஆண்டில் மொத்தம் 1,102 பயிற்சித் திட்டங்களை நடத்தியதன் வாயிலாக 26,615 பெண்கள் பயனடைந்துள்ளனர்

**இலக்கு 12: நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி**

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

"நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தலை" இந்த இலக்கு வலியுறுத்துகிறது. கால்நடைப் பண்ணையங்களில் நீர் பயன்பாட்டைக் குறைத்தல், சிறந்த மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் கழிவுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நிலையான நடைமுறைகளைப் பின்பற்ற இப்பல்கலைக்கழகம் உறுதிபூண்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் உணவில் மூன்றில் ஒரு பங்கு வீணடிக்கப்படுவதை உணர்ந்து, மேம்படுத்தப்பட்ட

செயல்திறன் மற்றும் நிலைப்புத்தன்மைக்கு பங்களிக்கும் விநியோகச் சங்கிலியில் ஏற்படும் விரயங்கள் மற்றும் இழப்புகளைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழகம் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் இறைச்சி அறிவியலில் அறுவடைக்குப் பிந்தைய பொறியியல் தொழில்நுட்பம் குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. 2021-22 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- இறைச்சி பதப்படுத்தும் கருவிகளை உருவாக்கி இறைச்சி பதப்படுத்தும் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அதிக வருவாய் பெற வழிவகுத்தல்
- குறைந்த மதிப்புள்ள இறைச்சியினைப் பயன்படுத்த, மதிப்புக் கூட்டிய செயல்பாட்டு இறைச்சிப் பொருட்களை உருவாக்குதல்.
- செல்லப் பிராணிகளுக்கான உணவு, செல்லப்பிராணிகளுக்கான விருப்ப உணவுகள்,

ஜப்பானிய காடைகளுக்கான தீவனம் மற்றும் கொலாஜன் காண்ட்ராய்டின் சல்பேட் சாரக்கட்டுகள் மற்றும் கெரட்டின் பயோஃபில்ம்கள் பயன்படுத்தி இறைச்சிக்கூடக் கழிவுகளை மதிப்புக் கூட்டிய பொருட்களாக உற்பத்தி செய்தல் மூலம் இறைச்சிக் கூடக் கழிவுகளை முறையாகப் பயன்படுத்துதல்.

## 20.11 கால்நடைத் துறையில் துவக்க நிலை நிறுவனங்கள்

கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் அதன் சார்புத் துறைகளில் துவக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் கால்நடை அறிவியல் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பினை (VIF@TANUVAS) இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. 2021ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் முக்கிய நடவடிக்கைகளாவன:

- புதிய கால்நடை பராமரிப்பு சார்ந்த பொருட்கள்/தொழில்நுட்பங்களை உருவாக்கும்

பொருட்டு ஆறு துவக்க நிலை நிறுவனங்கள் கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்து பயனடைந்துள்ளன.

- புதிய அணுகு முறையாக, கால்நடை அறிவியல் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பானது பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குனகரத்துடன் இணைந்து முன்னோடி கால்நடை விவசாயிகள் வலை அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த வலை அமைப்பின் மூலம் முன்னோடிப் கால்நடை விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு 100 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட உள்ளனர். கால்நடை அறிவியல் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்துள்ள துவக்க நிலை நிறுவனங்களால் உருவாக்கப்படும் புதிய பொருட்கள்/ தொழில்நுட்பங்கள் இம்முன்னோடி விவசாய உறுப்பினர்கள் மூலம் கள அளவில் மதிப்பீட்டாய்வு செய்ய வழி வகை செய்யப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு இளநிலை பட்டம் பயிலும் மாணவர்களிடையே தொழில்முனைவு திறன் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பணியினையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.
- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் செயல்படும் தமிழக அரசின் கண்டுபிடிப்பாளர் அறிமுகத் திட்டம்-Aஇன் கீழ் VIF@TANUVASஇன் நான்கு துவக்க நிலை நிறுவனங்களும், கண்டுபிடிப்பாளர் அறிமுகத் திட்டம்-Bஇன் கீழ் ஒரு துவக்க நிலை நிறுவனமும் நிதியுதவி பெற்றுள்ளன.
- துவக்க நிலை நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட மடிவீக்க நோயைத் தடுப்பதற்கான நானோ தொழில்நுட்பம் சார்ந்த டீட் டிப் (Teat Dip), கால்நடை மாதிரிகள் சேகரிப்பு சாதனம், கால்நடைகள் அடையாளம் காணும் தொழில்நுட்பம், நாய்களைத் தாக்கும் ஓரணு உயிரி நோய்களைக் கண்டறியும் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப

ஆலோசனை, மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளுதல் ஆகிய வசதிகளை VIF@TANUVAS செய்து தருகின்றது.

### 20.12 தொழிலக-கல்வி நிறுவனத் தொடர்பு

தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்களில் இணைந்து செயல்படும் நோக்குடன் 2021ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பின்வருமாறு :

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களை தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென 07.06.2021அன்று கர்நாடகாவில் உள்ள பயோவெட் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் வாயிலாக கறவைப் பண்ணையாளர்கள் நிலைத்த பண்ணை மேலாண்மை முறைகளை அறிந்து கொள்ளும் இலக்குடன் 03.09.2021 அன்று இப்பல்கலைக்கழகம் திருமலா பால் பொருட்கள் தனியார் நிறுவனம்,

சென்னை மற்றும் அசிஸ்ட் டெவலப்மெண்ட் சொல்யூசன்ஸ், சென்னை ஆகியவற்றுடன் முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் செயல்படும் கல்வி நிலைய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் "தொழில்துறைக்குத் தேவையான திறனுடன் கால்நடை மருத்துவர்களை உருவாக்குதல்" குறித்த தொழில் பயிலரங்கு 18.02.2021அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும். 12.03.2021 அன்று கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லிலும் நடத்தப்பட்டன. இவற்றில் 117 தொழில்துறை சார்ந்தவர்களும் 125 இளங்கலை/முதுகலை மாணவர்களும் பங்கேற்றனர்.
- தெர்மோ ஃபிஷர் சயின்டிஃபிக் நிறுவனத்துடன் இணைந்து "அடுத்த தலைமுறை மரபணு வரிசைப்படுத்துதல்" குறித்த பயிற்சி 12.08.2021 முதல் 14.08.2021 வரை கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தில் நடத்தப்பட்டதில்

பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் பயனடைந்தனர்.

- இப்பல்கலைக்கழகம் ஐசிஜசிஜ அறக்கட்டளையுடன் இணைந்து ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 24.08.2021 மற்றும் 25.08.2021ஆம் தேதிகளில் "கால்நடை உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு - சிறு மற்றும் துவக்க நிலைத் தொழில்முனைவோர்கள்" குறித்த மாநில அளவிலான தொழில்முனைவோர் இணையப் பயிலரங்கு மற்றும் குழு விவாத நிகழ்ச்சியினை நடத்தியதில் 847 நபர்கள் பயனுற்றனர்.
- முருங்கை இலை கொண்டு தயாரிக்கப்பட்ட தீவனங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வினை இணைந்து மேற்கொள்ள இப்பல்கலைக்கழகம் 01.12,2021 அன்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

## 20.13 2022-23ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்

கால்நடைத்துறைச் சார்ந்த கிராமப்புற வாழ்வாதார சார்பு நிலை பெருகிக்கொண்டிருக்கிறது. இதனை கருத்தில் கொண்டு நவீன உத்திகள் மூலம் கால்நடை நலம் பேணுதல், எருமைகளின் இனப்பெருக்கதினை ஊக்குவித்தல். வாழ்வாதார உற்பத்தியினை பெருக்குதல், நடுநிலையான சுற்றுச்சூழலுக்கு வழிவகுத்தல், கால்நடை மரபியல் திறனை மேம்படுத்துதல், இயற்கை முறையில் கால்நடை வளர்ப்பினை ஊக்குவித்தல் ஆகியவற்றினை மேற்கொண்டு கால்நடைத் துறையின் நிலைப்புத்தன்மை உறுதிச் செய்யப்படவேண்டிய கட்டாயம் உள்ளது. மேலும் இளைஞர்கள் மற்றும் பெண்களை கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்துதல், கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கையை அதகரித்தல், கால்நடை சார் தொழில்முனைத் திறனை ஊக்குவித்தல், “களநிலையில் இருந்து ஆய்வகம்” அதாவது களநிலைப் பிரச்சனைகளுக்கு ஆராய்ச்சி வழி தீர்வுகாணலுக்கு முன்னுரிமை அளித்து கால்நடை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை

கால்நடைத்துறை மேம்பாட்டிற்கு வழிவகுப்பனவாகும். தன்னிகரற்ற இப்பல்கலைக்கழகமானது கால்நடைத்துறையின் வளர்ச்சிக்கு இருகரம் கோர்த்து உரிய பணிகளை மேற்கொள்வதுடன் "ஒரே சுகாதார அணுகுமுறையை" பின்பற்றி மனித வள மேம்பாட்டிற்கும் வழிவகை செய்யும்.

'ஒரே சுகாதார அணுகுமுறையின்' மூலம் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து இப்பல்கலைக்கழகம் கால்நடைத் துறையை மட்டுமல்ல, மனித நல்வாழ்வினையும் மேம்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகின்றது, மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆரோக்கியத்தைப் பெறும் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச அளவில் பணிபுரியும் பல துறைகளின் கூட்டு முயற்சியால் இந்த அணுகுமுறை செயல்படுத்தப்படுகிறது, இதன் மூலம் வெறிநோய், புருசெல்லோசிஸ், எலிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், அடைப்பான் போன்ற விலங்குவழி பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த உதவும்.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

- கால்நடைகளுக்கு தரமான சிகிச்சை அளித்து அதன் நலன் பேண ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவமனை தகவல் அமைப்பு உருவாக்குதல்
- பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம், மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநரகத்தின் அமைப்புசாரா தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான மாநில மையம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஒருங்கிணைந்த ஒரே சுகாதார அணுகுமுறையை வலுப்படுத்துதல்
- தமிழகத்தில் உள்ள மலட்டு எருமைகளின் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத் திறனை அதிகரிக்க இனப்பெருக்க உதவி தொழில் நுட்பங்கள் மூலம் எருமைகளில் மலட்டுத் தன்மைக்கு தீர்வு காணுதல்

- கூடுதல் ஊட்டச்சத்து / தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து மூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்
- தமிழகத்தின் நாட்டின கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாத்தல்
- கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டிணைவு
- வேலையற்ற இளைஞர்கள் மற்றும் ஊரகப் பெண்களுக்குக் கால்நடைப் பராமரிப்பு நடவடிக்கைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்
- சிறந்த மேலாண்மை முறைகள் மற்றும் செயலிகள் மூலம் மின் ஆளுமையினை மேம்படுத்துதல்
- கால்நடை மருத்துவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்
- தொழிலகம்-பல்கலைக்கழகம் இணைந்த ஆராய்ச்சிக் கூட்டமைப்பினை நிறுவி தொழிலகங்களின் தேவையறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

மற்றும் புதிய துவக்கநிலை நிறுவனங்களை ஊக்குவித்தல்.

- கால்நடைகளில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள வழிமுறைகள் / தணிப்புத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- நடப்பிலுள்ள "ஆய்வகத்திலிருந்து களம்" நோக்கிய அணுகுமுறையினை தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் பார்வை "களநிலையிலிந்து ஆய்வகம்" நோக்கி கால்நடை விவசாயிகள் எதிர்கொள்ளும் களப்பிரச்சனைகளுக்கு முன்னுரிமையளித்து ஆய்வக ஆராய்ச்சி வழி தீர்வுகான முனைதல்

## 21. வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-2023

2022-2023ம் நிதி ஆண்டுக்கு ரூ.1,314.84 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. அதில் ரூ.1,192.11 கோடி வருவாய் செலவினமாக இருக்கும், ரூ.122.34 கோடி மூலதன செலவினமாக இருக்கும் மற்றும் கடன் ரூ.0.40 கோடியாக இருக்கும்.

## 22. முடிவுரை

மாநிலத்தில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கிராமப்புற ஏழைகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ், மேற்கூறிய உறுதிமொழியை அடைய இத்துறை அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

கால்நடை பராமரிப்புத் துறையானது கால்நடைகளின் மரபணு திறனை மேம்படுத்துதல், போதுமான செயற்கை முறை கருவூட்டல் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல், மலட்டுத்தன்மை நிகழ்வுகளைக் குறைத்தல், கால்நடைகளின் நோய் எதிர்ப்புத் திறனை மேம்படுத்துதல், தீவன உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் கால்நடை உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் கால்நடைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அதன் மேம்பட்ட கற்றல், ஆராய்ச்சி மற்றும்

விரிவாக்க உள்கட்டமைப்புடன், கால்நடை மருத்துவம், கால்நடை மற்றும் உணவு அறிவியல் கல்வியில் தொடர்ந்து சிறந்து விளங்குவதுடன், முன்னோடி ஆராய்ச்சி மற்றும் தொலைநோக்கு திட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது.

கால்நடை பராமரிப்பு துறை பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துள்ளது. இத்துறை கால்நடை உற்பத்தியாளர்களின் திறனை உள்ளடக்கிய மற்றும் நிலையானதாக மேம்படுத்தும். ஒட்டு மொத்தமாக, கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு, கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்றவாறு சரிசெய்துகொள்ளும்.

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

**மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**

**கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.11.2021 அன்று கருணை அடிப்படையில் 23 நபர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார்கள்.



மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கால்நடை பராமரிப்புத்துறை தொடர்பான கோரிக்கை மனுவினை 01.04.2022 அன்று வழங்கினார்கள்.



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா (30.03.2022)



நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய பண்ணைக் கட்டடங்களை மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் 08.03.2022 அன்று திறந்து வைத்தார்கள்.



திருநெல்வேலி கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள கால்நடை மற்றும் கோழியின தீவன தொழில்நுட்ப மையத்தினை மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் 15.03.2022 அன்று துவக்கி வைத்து இடு பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.




தூத்துக்குடி மாவட்டம் முக்காணி கிராமத்தில் 23.10.2021 அன்று நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில் மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் 09.04.2022 அன்று பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கினார்கள். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றம் மற்றும் இளைஞர் நலன், விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

அயலின பசுக்கள்



ஹோல்ஸ்டீன் பிரீசியன்



ஜெர்சி

உள்நாட்டின கால்நடைகள்



ஆலம்பாடி



காங்கேயம்



பர்கூர்



புலிக்குளம்



உம்பளாச்சேரி




தோடா எருமை

## உள்நாட்டின செம்மறியாடுகள்



சென்னை சிவப்பு



கீழக்கரிசல்




மேச்சேரி



செவ்வாடு



கோயம்புத்தூர்



திருச்சி கருப்பு


உள்நாட்டின செம்மறியாடுகள்



வேம்பூர்



இராமநாதபுரம் வெள்ளை



கச்சகட்டி

உள்நாட்டின வெள்ளாடுகள்



கன்னி ஆடு



சேலம் கருப்பு



கொடி ஆடு

உள்நாட்டின நாய்கள்



இராஜபாளையம்



சிப்பிப்பாறை



கன்னி



கோம்பை

தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் கோழியினங்கள்



அசீல்



கடக்நாத்

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.